விலை ரூபா: 15.00


*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 23 வியாழக்கிழமை (09.10.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 295




## சங்குப்பிட்டியில் மோதல் 2 விடுதலைப்புலிகள் பலி

### பாதுகாப்பு அமைச்சு தகவல்

(கொழும்பு)

யாழ்ப்பாணம், சங்குப்பிட்டிப் பகுதியில் நேற்றுப் படையினரால் இரண்டு விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதோடு பெருமளவிலான வெடிபொருள்கள் மீட்கப்பட்டதாகவும் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இப் பகுதியில் புலிகளின் நடமாட்டத்தை அவதானித்த படையினர் மேற்கொண்ட தாக்குதலின் போதே இந்த இரண்டு புலிகளும் கொல்லப்பட்டுள்ளனர்.

புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் படை வீரர் ஒருவர் காயமடைந்துள்ளார். தாக்குதலின் பின்னர் அப் பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் *(12 ஆம் பக்கம் பார்க்க)*

## நோர்வே, பிரிட்டன் தூதுவர்கள் யாழ்ப்பாணத்துக்குத் திடீர் விஜயம்

### மேல் நீதிமன்ற நீதிபதியுடனும் சந்திப்பு

(கொழும்பு)

நோர்வே மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள் நேற்று யாழ்ப்பாணத்திற்குத் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

நோர்வேத் தூதுவர் ரோத்கட்டன், பிரித்தானியத் தூதுவர் பீற்றர் கொய்ஸ் ஆகியோருடன் அகதிகளுக்கான ஐரோப்பிய நாடுகள் ஸ்தாபனத்தின்து இலங்கைக்கான வெளிக்களப் பிரதிநிதி ஈடா சுவத் உட்பட 6 பேர் அடங்கிய குழுவினரே யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தனர்.

விமானம் மூலம் பலாலியை வந்தடைந்த அவர்கள் பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர். இவர்கள் யாழ்ப்பாண மேல் *(12 ஆம் பக்கம் பார்க்க)*

# இலங்கைத் தமிழர் பிரச்சினைகளில் இந்தியா அக்கறையுடன் செயற்படுகிறது

## காங்கிரஸ் கட்சி தெரிவிப்பு

(லண்டன்)

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் இந்திய காங்கிரஸ் கட்சியும் அதன் தலைவர்களும் அக்கறையுடனேயே செயல்பட்டு வருவதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஞானதேசிகன் கூறியுள்ளார். பி.பி.சி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். *(12 ஆம் பக்கம் பார்க்க)*

## வன்னிப் பகுதிக்கு மீண்டும் தபால் சேவைகள் ஆரம்பம்

(வவுனியா)

வடக்கே கடும் மோதல்கள் நடைபெற்று வரும் வன்னிப் பகுதிக்கு ஒரு மாத காலத்துக்குப் பின்னர் மீண்டும் நேற்றுத் தபால் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் இந்தத் தபால் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் இந்தத் தபால் சேவைகள் நடைபெறவுள்ளன.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பகுதிகளுக்கான சேவையும் அங்கிருந்து மறுமார்க்கமான சேவைகளும் வவுனியா தபால் அலுவலகத்தின் மூலமாக நடைபெறவுள்ளன.

ஏ-9 வீதியூடான போக்குவரத்து ஆபத்து நிறைந்ததாகக் கருத்தப்பட்டதையடுத்து இந்தத்தபால் சேவைகள் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் இதனால் வன்னிப் பகுதிக்கான பெருந்தொகையான *(12 ஆம் பக்கம் பார்க்க)*

### உள்ளே...

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஆய்வு அபிவிருத்திப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட

- க.பொ.த. (சா/த) பரீட்சை கணிதம் (வினாத்தாள்)
- க.பொ.த. (உ/த) பரீட்சை உயிரியல்

(பாட அலகு ரீதியான விளக்கம்)

## தமிழக கட்சிகளின் போராட்டம் அரசை அதிர்ச்சிக்குள்ளாக்கும்

### விடுதலைப்புலிகள் அறிக்கை

(கிளிநொச்சி)

தமிழக அரசியல் ஒன்றிணைந்து தமிழ் மக்களுக்காக மேற்கொள்ளும் போராட்டம் இலங்கை அரசுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தும் என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து விடுதலைப்புலிகளின் அரசியல்துறை வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

ஈழத் தமிழினம் மீதான அரசின் போர் என்றுமில்லாத வகையில் தீவிரமடைந்துள்ளது. இந்த நிலையில் தமிழ்நாட்டின் அரசியல் தலைவர்கள் ஒற்றுமையுணர்வுடன் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக்க் கவனயீர்ப்புப் போராட்டங்களை நடத்திக் குரல் கொடுத்து வருவது துன்பப்பட்டு வரும் எமது மக்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்துள்ளது.

போர் நெருப்பில் சிக்குண்டு எமது மக்கள் படும் அவலங்களை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. குண்டுகள் போட்டு எமது மக்களைக் கொன்று குவிக்கின்றார்கள். குடி எழுப்பிக் *(12 ஆம் பக்கம் பார்க்க)*

## கிளிநொச்சி மோதல்களில் 12 விடுதலைப் புலிகள் பலி

### பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சியிலுள்ள வன்னேரிக்குளம், முறிகண்டி மற்றும் அக்கராயன்குளம் ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற படையினருடனான வெவ்வேறு மோதல்களில் 12 புலிகள் கொல்லப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வன்னேரிக்குளத்தில் நேற்று முன்தினம் காலை 7.30 மணிமுதல் மாலை 6.20 மணி வரை இடம்பெற்ற மோதல்களின்போது 8 புலிகள் கொல்லப்பட்டனர்.

படையினர் புலிகளின் பதுங்கு குழியொன்றைத் தாக்கி *(12 ஆம் பக்கம் பார்க்க)*

## வன்னிக் களமுனைகளில் முறியடிப்புத் தாக்குதல்

### 62 படையினர் பலி என புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம் தெற்குப் பிரதேச அக்கராயன்குளம் முறிகண்டிப் பகுதிகளில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 5.30 மணியளவில் நடைபெற்ற மோதல்களில் இலங்கைப் படையினர் 26 பேர் கொல்லப்பட்டனர்.

மேலும் 49 படையினர் காயமடைந்துள்ளனர். அத்துடன் வன்னி விளாங்குளம் பகுதியில் ஏற்பட்ட மோதலில் 16 படையினரும் வன்னேரிக்குளத்தில் 20 படையினரும் கொல்லப்பட்டனர்.

இவ்வாறு மூன்று களமுனைகளிலும் மொத்தமாக 62 *(12 ஆம் பக்கம் பார்க்க)*

# முரளிதரன் எம்.பியாக நியமிக்கப்பட்டமை பலத்த சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது

## மூன்று கட்சிகள் கூட்டாக தெரிவிப்பு

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா படு கொலை செய்யப்பட்டதற்கு மறுநாள் கருணா நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப் பட்டமையானது பலத்த சந்தேகத்தை தோற்று வித்திருப்பதாக ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவு என்பன நாடாளுமன்றத்தில் கூட்டாக நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித் துள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தலைமையில் நடைபெற்ற இந்த விசேட செய்தியாளர் மாநாட்டில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும், சுதந் திரக் கட்சி மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீரவும் கலந்து கொண்டு இக்குற்றச் சாட்டை சுமத்தியுள்ளனர்.

எதிர்க்கட்சித்தலைவர் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

வடமத்திய மாகாண சபைத் தேர்தல் முடி புற்று இரண்டு மாதங்கள் கடந்த நிலையி லும் ஜே.வி.பி. உறுப்பினரின் நாடாளுமன்ற வெற்றிடத்துக்கு ஒருவரை நியமிக்காதிருந்த ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கட்சிக்குள் எவரையும் கண்டு கொள்ளாம லிருந்து விட்டு எந்தவித முன்னறிவித்தலு மின்றி 24 மணி நேரத்துக்குள் கருணா எம்.பி.யாக்கப்பட்டுள்ளார்.

அதுவும் அநுராதபுரத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலையடுத்து ஜானக பெரேரா கொல்லப்பட்ட மறுதினமே கருணா பதவியேற்றிருக்கிறார். இது அவருக்கு அளிக்கப்பட்ட பரிசாகவே சந்தேகப்பட வேண்டி யுள்ளது.

சட்ட விரோத ஆவணங்களுடன் வெளி நாட்டில் பிடிபட்டு நீதிமன்றத்தின் மூலம் சிறைத் தண்டனைத் தீர்ப்பு வழங்கி அதனை அனுபவித்த பின்னர் மீண்டும் திருப்பியனுப் பப்பட்டவர் இங்கு விசாரணைக்குட்படுத்தப் படாமல் அந்தச்செயலைப் பாராட்டும் விதத் தில் நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரப்பட் டுள்ளார். இதனால் நாடாளுமன்றத்தின் கௌரவம் பாதிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது,

நாட்டின் பாதுகாப்புக்கு எந்தவிதமான உத்தரவாதமும் காணப்படவில்லை. அரசு என்னதான் கூறியபோதிலும் தாக்குதல் தொ டர்வது குறித்து அரசு வெட்கப்பட வேண்டும். அத்துடன், அதற்கான பொறுப்பையும் ஏற்றே ஆகவேண்டும்.

நாட்டில் அரச பயங்கரவாதம் தலைவிரித் தாடுகிறது. ஜானக பெரேராவின் படுகொலை யின் பின்னணியிலும் அரச பயங்கரவாதம் இருப்பதாகவே நாம் பலத்த சந்தேகம் கொள் கின்றோம்.

இல்லாவிட்டால் சம்பவம் நடந்த மறுநாளே இன்னொரு பயங்கரவாதி எம்.பி.யாகி இருக் கின்றார். கருண்ா ஜனநாயக வழிக்கு வந்த தாகக் கூறுகின்றார். ஆனால், அவரிடம் இன்ன மும் சட்ட விரோத ஆயுதமும் அடியாட்களும் இருக்கின்றனர். இது தான் ஜனநாயகத்தின் இலட்சணமா எனக் கேட்க விரும்புகின்றோம்.

ஜானக பெரேரா தலைமையில் மாற்று பாதுகாப்பு தகவல் மத்திய நிலையமொன் றை ஏற்படுத்தியுத்தமுனையின்உண்மைநிலை யைவெளிபடுத்த எதிரணிகள் திட்டமிட்டிருக் கும் நிலையில், இந்தப் படுகொலை நடந்துள் ளது. அரசியல் பின்னணியில்லாமல் இச்சம் பவம் நடைபெற்றிருக்கவே முடியாது என்பது தான் எமது நிலைப்பாடாகும்.

அரச பயங்கரவாதம் வெற்றிகரமாக் முன்னெடுக்கப்படுவதற்கு கருணா அம்மா னின் ஒத்துழைப்பு தாராளமாகக் கிட்டுகிறது. அதற்கான பரிசே நாடாளுமன்ற உறுப்பினர் பதவியாகும்.

விடுதலைப் புலிகள் யுத்த முனையில் தான் பலவீனப்படுத்தப்பட்டதாக கூறுவதை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம். புலிகள் இயக்கத்துக்குள் பிளவு ஏற்படுத்தப்பட்ட தா லேயே அது பலவீனப்படுத்தப்பட்டது. அதற் குரிய பெருமை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவையே சாரும் எனவும் மங்கள சமரவீர தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக் கீம் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது,

அரசாங்கம் எதிர்க்கட்சிகள் தொடர்பிலும் அதன் முக்கியஸ்தர்கள் தொடர்பிலும் மாற் றாந்தாய் மனப்போக்கில் செயற்படுகின்றது. இத்தகைய தவறான எடுகோள்கள் காரண மாக விலைமதிக்க முடியாத உயிர்கள் பலியாகியவண்ணமிருக்கின்றன.

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா மற்றும் கொல்லப்பட்ட 28 பேர் தொடர்பில் அரசு பாரபட்சமற்ற விசாரணையொன்றை நடத் துமா என்பது சந்தேகத்துக்கிடமானது. பொலிஸ் தரப்பு நடந்து கொள்ளும் செயற் பாடுகளை அவதானிக்கும் போது இந்த சந்தேகம் மேலும் வலுவடைகின்றது.

எதிரணியினருக்கு பாதுகாப்பு அச்சுறுத் தல் இருப்பதை சுட்டிக்காட்டும்போது அதனைக் கண்டு கொள்ளத்தவறும் அரசும் பாதுகாப் புத்தரப்பும் விபரீதம் நடந்த பின்னர் அதற்குக் காரணம் கற்பிப்பதில் சமர்த்தர்களாக காணப்படுகின்றனர். பொலிஸார் தொடர்ந்து யதேச்சையாக பொறுப்பற்ற விதத்திலேயே நடந்து கொள்ள முனைகின்றனர்.

ஆளும் தரப்பினரின் உயிர்களைப் பாது காப்பதற்கு அதியுச்ச நடவடிக்கை எடுக்கும் அரசு, எதிர்தரப்பை கிள்ளுக்கீரையாக நினைத் துச் செயற்படமுனைகிறது.

இது அரசின் வன்மப் போக்கினையே காட்டுகின்றது. நாம் எமது பாதுகாப்பை உறுதி செய்து கொள்வதற்கு நீதிமன்றம் வரை போக வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, நாம் அரசுடன் இருந்தால் எல்லை மீறிய அளவில் பாதுகாப்பு நிச்சயம் கிடைக்கும். இதுதான் இன்றைய அரசின் நிலைப்பாடாக காணப்படுகிறது.

ஜெனரல் ஜானக பெரேரா உட்பட 28 பேரின் படுகொலை தொடர்பிலும் ஏலவே இடம் பெற்ற படுகொலைகள் தொடர்பிலும் முழுப்பொறுப்பையும் அரசுதான் ஏற்கவேண் டும்.

ஒரு ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்தைக் காட்டி கொலையாளி மன நோயாளி எனக் கூறுகின்றார் பிரதமர். பொறுப் புள்ள பிரதமர் இவ்வாறு கூறுவது கவலைத் தரக் கூடியதாகும். அதே ஆங்கில ஏடு முன் பக்கத்தில் வெளியிட்ட செய்தியை பிரதமர் கண்டு கொள்ளாதிருப்பது வேடிக்கையான தாகும்.

அநுராதபுரம் படுகொலை தொடர்பிலான பாரபட்சமற்ற விசாரணைகள் நடப்பதை சீர் குலைப்பதற்கு பொலிஸ்தரப்பு மறைமுக மாகச் செயற்பட்டு வருகிறது. இந்த விடயத் தில் நாம் மிகக் கவனமாக இருக்க வேண்டும் எனவும் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். (ச-5)




பருத்தித்துறையில் வசித்துவரும் அகஸ்ரீன் செல்வராஜன் அகிலா தம்பதியாரின் தவப் புதல்வன் அனக்ஷன், தனது 1-வது பிறந்த நாளை இன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா (பிரான்ஸ்), அம்மா, அம்மம்மா, அம்மப்பா, அப்பம்மா, ஜேர்மனியில் வசிக்கும் பொன்ராசு மாமா குடும்பத்தினர், பிரான்ஸில் வசிக்கும் அரவிந்தன் மாமா, கொழும்பில் இருக்கும் யசோ அன்ரி, ராஜன் பெரி யப்பா குடும்பத்தினர், இத்தாலியில் வசிக்கும் சவுந்தரன் பெரியப்பா குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அனக்ஷனை பல்லாண்டு காலம் இறை அருளுடன் வாழ குழந்தை இயேசுவின் அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

-குடும்பத்தினர்.

(C-1641)

## வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் 5 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டம்

(வட்டுக்கோட்டை)

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே முதன் முறையாக ஐந்து வீரர்கள் பங்குபற் றும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டுத் துறையினரால் கல்லூரியின் முதலாவது தேசிய அதிபராக கடமையாற்றிய கே.ஏ.செல்லையா ஞாபகார்த்தமாக நடாத் தப்படவுள்ளது.

இப் போட்டிகள் எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியள வில் கல்லூரி முதல்வர் என்.ஏ.விமலேந்தி ரன் தலைமையில் கல்லூரி பிக்னல் மைதா னத்தில் நடைபெறவுள்ளது.

இவ் உதைபந்தாட்டசுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்டத்தில் இருந்து பத்து உதைபந் தாட்ட அணிகள் பங்கு பற்றவுள்ளன. இவ்சுற் றுப்போட்டியினை யாழ்.மாவட்டத்தில் முதன் முறையாக அறிமுகப்படுத்துவதோடு வீரர் கள் தங்கள் திறமைகளை வெளிக் கொண்டு வந்து இவ் உதைபந்தாட்டத்தினை யாழ். மாவட்டத்தில் வளர்த்தெடுக்கும் நோக்கத் தோடு யாழ்ப்பாணக்கல்லூரியில் ஒவ்வொரு ஆண்டும் இதனை சுற்றுப் போட்டியாக நடாத்தவுள்ளதாகவும் கல்லூரி முதல்வர் என்.ஏ.விமலேந்திரன் தெரிவித்தார்.

மேற்படி இவ் ஐந்து வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி வடக்கு, கிழக்கு மாகாணத்தில் யாழ்.மாவட்டத்தில்முதன் முறை யாக 2007ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங் கத்தினால் கழகங்களுக்கிடையே அறிமுகம் படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ச-27)

## அம்பாறையில் தாக்குதல்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்திலுள்ள கஞ்சிக் குடிச்சாறு வனப்பகுதியில் சிறப்பு அதிரடிப் படையினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் அதிர டிப்படையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

கஞ்சிக்குடிச்சாறு வனப்பகுதியில் உள்ள சிறப்பு அதிரடிப்படையினரின் பிரதான முகா மை அண்டிய பகுதியில் நேற்று முற்பகல் 9.45 மணியளவில் விடுதலைப் புலிகள் கண்ணிவெடித் தாக்குதலை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் சிறப்பு அதிரடிப்படை யைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் இருவர் சம் பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர் என விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். (ச-5)

## மானச சஞ்சாரம்

யாழ். பல்கலைக்கழக உள மருத்துவத் துறை,உளநலச் சங்கம் ஆகியவற்றுடன் சாந்திகம் இணைந்து நடாத்தும் மானச சஞ்சாரம்-2008 உலக உளநல நாள் நிகழ் வுகள் நாளை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல் கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தின ராக யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்ன ராசா கலந்து கொள்கின்றார்.

(ச-3)

**கடை விற்பனைக்கு**

கஸ்தூரியார் வீதியில் மின்சார நிலை யச் சந்திக்கும், ஸ்ரான்லி வீதிச் சந்திக் கும் இடையில் மேற்குப் புறமாக சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடிக் கடை 100 அடி நீளமும் 12 அடி அகலமும் உடை யது. உடன் விற்பனைக்கு உள்ளது. விபரங்களுக்கு:-

135,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(1829)

# இன்று ஒரு தகவல்

## பூமியின் சொர்க்கம்!

ஒரு பெரியவர் இருந்தார். அவர் ஆழ்நிலை தியானமெல்லாம் செய்பவர் .பெரிய மகான்களிடம் தொடர்புள்ளவர்.

அவரிடம் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தேன். ''உலகம் முழுவதும் எங்கு பார்த்தாலும் சண்டை சச்சரவாகவே இருக்கிறது... வருங்காலத்தில் மனிதன் நிம்மதியாகவே வாழ முடியாது போலிருக்கே!'' என்றேன்.

"அதற்கு மனிதன் தான் காரணம் .மனிதன் மனம் வைத்தால் இந்த பூமியை சொர்க்கமாக மாற்ற முடியும். இது ஏதோ பேச்சுக்காக சொல்லும் வார்த்தை இல்லை நிஜம் !"என்றார்.

அவர் சொல்வதை ஆர்வமாகக் கேட்டேன் அவர் சில விஞ்ஞான உண்மைகளைச் சொன்னார்.

ஒரு சோதனை நடந்ததாம் . ஒரே மாதிரியான இரண்டு தோட்டம் இருந்தது.அதில் ஒன்றில் இருந்த செடி, கொடிகளை தோட்டக்காரர் அன்பாகவும் கனிவாகவும் கவனித்து வந்தாராம்.

இன்னொரு தோட்டத்தில் உள்ள செடி , கொடிகளை வெறுப்பாகவும் – எரிச்சலாகவும் கவனித்துக் கொண்டாராம்.

அன்பாகவும் கனிவாகவும் கவனித்து வந்த செடி கொடிகள் சீக்கிரமாகவும் –வலுவாகவும் வளருதாம்.

வெறுப்பாக கவனித்து வந்த தோட்டம் அந்த அளவுக்கு வளரவில்லையாம்.

இன்னொரு சோதனை , ஒரு தோட்டக்காரருக்கு prune பண்ணுவது மட்டும் தான் வேலை. அதாவது பெரிய கத்தரிக் கோலை இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு தேவையில்லாத கிளைகளை வெட்டி ஒழுங்கு பண்ணும் வேலை!

இந்த தோட்டக்காரர் ஒரு நாள் தனது நண்பரைப் பார்ப்பதற்காக அவரது தோட்டத்துக்குப் போனார். இவர் அங்கு போனவுடன் அங்கேயிருந்த சில நுட்பமான செடிகள் இலைகளைச் சுருக்கிச் கொள்ள ஆரம்பித்ததாம்– வெட்டுவதற்குத் தான் வருகிறார் என்பது மாதிரி!

இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால்... மனிதனுடைய எண்ண அலைகள் இன்னொரு பொருளையும் பாதிக்கிறத்து என்பது தான்.

ஒரு தனி மனிதனுடைய எண்ணம் –சொல் –செயல் மூன்றும் இந்தப் பிரபஞ்சத்தில் ஒரு பாதிப்பை ஏற்படுத்த முடியும் என்பது உண்மை.

எல்லோரும் நல்ல மாதிரியாக நினைத்தால் உலகில் நல்லது பெருகும் .கெட்டது குறையும்.

சரி! நல்ல எண்ணம் (Right thought) என்றால் என்ன?

இயற்கையின் விதிகளைப் புரிந்து கொண்டு அதை மீறாமல் அதுனுடன் ஒத்துப் போகும் எண்ணம் தான் நல்ல எண்ணம்!

நமது வாழ்க்கை ஒரு சங்கிலித் தொடர் மாதிரி உணர்வு பூர்வமாக இணைக்கப்பட்டிருக்கிறது.

ஒருவருடைய உடம்புக்கோ –மனதுக்கோ ஒரு அதிர்ச்சியால் பாதிப்பு ஏற்படுகிறது என்று வைத்துக் கொண்டால் அது அவனுக்கு ரத்த சம்பந்தமான அல்லது கடமை சம்பந்தமான மற்றவர்களின் உடம்பிலும் மனதிலும் ஓரளவு பாதிப்பை ஏற்படுத்தும்.

இயற்கையின் விதிப்படி தான் எண்ண அலைகள் அடுத்தவர்களைப் பாதிக்கிறது.

சில பேர் வாழ்த்தினாலும் திட்டினாலும் அது அடுத்தவர்கள் மீது ஒரு அழுத்தத்தை உண்டு பண்ணுகிறது!

இந்த அண்டவெளியும் ஒரு குறிப்பிட்ட அளவுக்குத் தான் கெட்ட எண்ணங்களை தாங்க முடியும் அளவுக்கு மீறினால் நெருக்கடி– கலவரம்– சண்டை!

இந்த விஞ்ஞான உண்மைகளையெல்லாம் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் குறைந்தது மூன்றாம் வகுப்பிலிருந்து குழந்தைகளுக்குப் போதித்தால் வருங்காலத்தில் நல்ல விதமான எண்ண அலைகள் இந்தப் பிரபஞ்சத்தில் பரவும். அதற்குப் பின்னர் இந்த பூமியே சொர்க்கமயமாகும் என்றார்.

இது சிந்திக்கவேண்டிய ஒரு விடயம் தான்!

இந்தப் பூமியை சொர்க்கமயமாக்க வேண்டுமென்று கடவுள் ஒரு தரம் நினைத்தாராம் . உடனே புறப்பட்டு பூமிக்கு வந்து சேர்ந்தார். மனிதனுக்குள்ள குறைகளை நிவர்த்தி செய் வோம். என்று ஆரம்பித்தார்.முதலில் ஒரு ஆளைப்பார்த்தார். அவன் அழுது கொண்டிருந்தான். "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார்.

அதற்கு அவன் " 10 ரூபாவைத் தொலைத்து விட்டேன். என்றான்

"பரவாயில்லை! அதற்காக கவலைப்படாதே! நான் பத்து ரூபாய் தருகிறேன் வைத்துக் கொள்" என்று சொல்லி 10 ரூபாய் கொடுத்தார். அதை வாங்கியவுடன் இன்னும் பலமாக அழ ஆரம்பித்தான்.

மறு படியும் ஏன் அழுகிறாய் ? என்றார் கடவுள். " நான் தொலைத்த 10 ரூபாயும் இருந்தால் இப்பொழுது என் கையில் 20 ரூபாயாகஇருக்குமே!" என்று சொல்லி தேம்பித்தேம்பி அழ ஆரம்பித்து விட்டான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கிளிநொச்சி நகரப் பகுதியில் இருந்து அனைத்து மக்களும் இடம் பெயர்வு

## மனித நேய அமைப்புகளின் ஒன்றியம் அறிக்கை

வன்னிப் பகுதியில் அதிகரித்திருக்கும் மோதல்களால் கிளிநொச்சி நகரப் பகுதியிலிருந்து அனைத்துப் பொது-மக்களும் இடம் பெயர்ந்திருப்பதாக ஐக்கிய நாடுகள் தலைமையாகக் கொண்ட மனித நேய அமைப் புக்களின் ஒன் றியம் வெளியி ட்டுள்ள இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நோக்கிய அரசாங்கப்படைகளின் வான் தாக்குதல்கள் மற்றும் எறிகணைத் தாக்குதல்களால் பல்வேறு பகுதிகளி லிருந்து இடம் பெயர்ந்து கிளிநொச்சியில் தங்கியிருந்த ஆயிரக் கணக்கான மக்கள் தற்பொழுது முல்லைத்தீவு நோக்கி இடம் பெயர்ந்திருப்பதாக மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்தள்ளது.

பெரும்பாலும் கிளிநொச்சியில் தங்கியிருந்தஅனைவரும் முல்லைத்தீவுமாவட்டத்துக்கு இடம் பெயர்ந்துள்ளனர் என அந்த ஒன்றியத்தின்அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாக்குதல்கள் காரணமாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் அலுவலக்மும் மாற்றப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத் தகவலுக்கமைய ஒரு லட்சத்து 47ஆயிரத்து313 பேர் முல்லைத் தீவுநோக்கி இடம் பெயர்ந்திருப்பதுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் 66ஆயிரத்து 707பேர்தொடர்ந்தும் தங்கியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு கடந்த 2ஆம் திகதி 655மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டு புதுக்குடியிருப்பு , கண்டாவளை,தர்மபுரம் மற்றும் முள்ளியவளை ஆகிய நான்கு இடங்களில் பொது மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதேவேளை இடம் பெயர்ந்த மக்களுக்கு வாராந்தம் உணவுப் பொருட்களை அனுப்பி வைக்கவிருப்பதாக மீள் குடியேற்ற அனர்த்த நிவாரண சேவைகள்அமைச்சர் ரிசாட் பதியுதீன் கூறியிருந்தமை இங்குகுறிப்பிடத்தக்கது. (அ–6)

# வடக்கு ,கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் இருந்து வந்தவர்களைப் பதிவது தொடர்பில் தீர்மானம் இல்லை

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்குத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களிலிருந்து மேல்மாகாணத்துக்கு வந்தவர்களைப் பதிவுசெய்வது தொடர்பில் இது வரை எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லையென பொலிஸ்ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர கூறினார்.

.கடந்த ஐந்து வருடங்களுக்குள் வடக்கு கிழக்கிலிருந்து மேல் மாகாணத்துக்கு வந்து தங்கியிருப்பவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் இரண்டு வார காலஇடைவெளியில்மேற் கொள் ளப்பட்டிருந்தன.கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆயிரத்து419 குடும்பங்கள்கடந்த ஐந்து வருடத்துக்குள் மேல் மாகாணம் வந்திருப்பதாக பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார்.

முதலில் 410 குடும்பங்கள் பொலிஸில் பதிவுகளை மேற்கொண்டிருந்தன. எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நாட்டின் ஏனைய பகுதி களிலிருந்து மேல்மாகாணத்திற்கு வந்தவர்களைப் பதிவு செய்வது பற்றி இது வரை எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குறிப்பிட்டார்.கடந்த ஐந்து வருடத்துக்குள் வடமாகாணத்திலிருந்து மேல் மாகாணத்திற்கு வருகை தந்தவர்கள் கடந்த செப்ரெம்பர் 21ஆம் திகதி பொலிஸாரால் பதிவு செய்யபட்டிருந்தனர்.இதன்போது 10 ஆயிரத்து820பேர் பதிவு செய்யப்படிருந்தனர்.

வடக்கு மாகாண மக்களை மாத்திரம் குறி வைத்தே இந்தப் பொலிஸ் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் அமைப்புக்கள் குற்றஞ் சாட்டியுள்ளன.(அ–6)

# பலஸ்தீன ஜனாதிபதி இன்று இலங்கை வருகிறார்

(கொழும்பு)

இன்றுபிற்பகல் 2மணிக்கு வந்தடையவுள்ள கட்டுநாயக்க பண்டார நாயக்க சர்வ தேச விமான நிலையத்தை வந்த டையவுள்ள பலஸ்தீன ஜனாதிபதிக்குவிமான நிலையத்தில் பூரண அரச மரியாதையுடன் செங்கம்பள வரவேற்பும் அளிக்கப்படவுள்ளது.

இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு இன்றுஇலங்கைக்கு வருகை தரவுள்ள பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ,பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க, வெளி விவகாரஅமைச்சர் ரோஹித போகொல்லாகம ,முஸ்லிம் அமைச்சர்கள்,இலங்கையிலுள்ள முஸ்லிம் நாடுகளின் தூதுவர்கள் மற்றும் உளமாக்கள் போன்றோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை நீண்ட காலமாக பலஸ்தீனத்தின்நட்பு நாடாகத் திகழ்ந்து வருகிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷஇலங்கை பலஸ்தீன ஒருமைப்பாட்டு அமை ப்பின்தலைவராகக் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ–6)

## இராசி பலன்

09.10.2008
(புரட்டாதி 23, வியாழக்கிழமை)
தசமி பின்னிரவு 4.07மணிவரை
திருவோணம் பின்னிரவு5.31மணிவரை
இராகுகாலம் 1.32–3.02மணிவரை
சுபநேரம்7.32–9.02மணிவரை
விஜய தசமி, கேதார கௌரி விரதஆரம்பம்

| | |
|---|---|
| மேடம் | உறவினர் சந்தி ப்பு, மேன்மை, போசன சுகம், கடின முயற்சி |
| இடபம் | பிதா சிந்தை, சரீரப் பிரயாசை ,காரிய தாமதம்,பித்த ரோகம் |
| மிதுனம் | அபகீர்த்தி, ஆரோக்கியக் குறைவு ,முயற்சி தாமதம் , வாகனபயம் |
| கடகம் | எடுத்த கருமங்கள் கைகூடும் ,செல்வாக்கு, பொருள் சேர்க்கை ,உடல் நலம் |
| சிங்கம் | நல்ல காரியம் ,அதிகாரம் , தேகநலன் , பகைவரால் நன்மை |
| கன்னி | வியாபார விருத்தி ,புத்திரரால் கவலை ,எடுத்த காரியம் தாமதமாகும். |
| துலாம் | புதிய உறவு , வீண்பயம்,சுப நிகழ்வு,முயற்சி தாமதம் |
| விருச்சிகம் | சகோதரர் உதவி, முயற்சி கைகூடும், போசன சுகம் , பிரயாணம் |
| தனுசு | கோபப்படல் ,முயற்சி தாமதம் , சுப செலவு , ஆரோக்கியக் குறைவு |
| மகரம் | தெளிந்த சிந்தை ,நல்ல முயற்சி ,பெரியோர் உதவி , விருந்துபசாரம் |
| கும்பம் | பிரயாணபயம் ,நிலை மாற்றம் , வேலைச் சுமை ,முயற்சி தாமதம் |
| மீனம் | பெரியோர் உதவி,தடைப்பட்ட காரியம் கைகூடும், அதிகாரம் , மனமகிழ்ச்சி |

வளவன்

# எதிர்வரும் நவம்பர் ,டிசெம்பர் மாதங்களில் இடியும் மின்னலும் அதிகமாக இருக்கும்

## வானிலை அவதான நிலையம் தெரிவிப்பு

எதிர்வரும் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் இடியுடன் கூடிய மின்னல் தாக்கம் அதிகமாக இருக்கும் என வானிலை அவதா ன நிலையம் தெரி வித்துள்ள து. இதன் காரணமாக பொதுமக்கள் அவதானத்துடன் இருக்குமாறு வானிலை அவதான நிலையம் தெரிவித்துள் ளது.

மின்னல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் வெளியான பிரதேசங்களில் நிற்பவர்கள் உடனடியாக தங்கும் இடம் ஒன்றினை ஏற்படுத் திக் கொள்வது சிறந்த பாதுகாப்பு முறைமையென அந்த நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன் பொது மக்கள் பரந்த வெளிகளில் நிற்பதைத் தவிர்க்குமாறும் வானிலை அவதான நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது.

**இலத்திரனியல் உபகரணங்களை நிறுத்தவும்.**

வாகனங்களில் செல்லும் போது பாதுகாப்பு கருதி செயற்படுமாறு வாகனங்களைத் தரித்து வைக்கும் போதுஉயர்ந்த மரங்கள் அற்ற பிரதேசங்களில் தரித்து வைப்பதைத் தவிர்க்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இலத்திரனியல் உபகரணங்களை செயற்பாட்டில் இருந்து நிறுத்தி வைக் குமா று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**தொலை பேசிப் பாவனையைத் தவிர்க்கவும்.**

இதே வேளை மின்னல் ஏற்படும் சந்தர்ப்பங்களின் போது கையடக்க மற்றும் நிலையான தொலைபேசிப் பாவனைகளை தவிப்பது பாதுகாப்பானது எனவும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (அ)

## பிரத்தியேக வகுப்புக்கள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கடந்த செப்ரெம்பர் மாதம் 27ஆம் திகதி சனிக்கிழமை முதல் யாழ். நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலையில் சனி ,ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாட்களில் நடாத்தப்பட்டு வந்த இலங்கை நிர்வாக சேவை முகாமைத்தவ உதவியாளர் சேவையின் அதி சிறப்புத் தரம் மற்றும் வகுப்பு -1 ஆகிய பதவியுயர்வுப் பரீட்சைகளுக்கான பிரத்தியேக வகுப்புக்கள் இட வசதியின்மை காரணமாக எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளதாக மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்க தலைவர் இ. இரத்தினசிங்கம் அறிவித்துள்ளார். ஓ

## ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் புரட்டாதி மாத இதழ் அரிய பல ஆன்மீக விடயங்களைத் தாங்கி வெளிவந்துள்ளது. ஓ

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் விக்னா கல்வி நிறுவனத்தின் வாணி விழாவை முன்னிட்டு பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு நீராவியடி சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரமத்தில் விக்னா கல்வி நிறுவன அதிபர் மு. ஜெயந்திக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்தீஸ்வரா கல்லூரி அதிபர் வ.வன்னியசிங்கம், சிறப்பு விருந்தினர்களாக நிறுவன சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர் நா. குழந்தைவேலு, நிறுவன சிரேஷ்ட ஆங்கில ஆசிரியர் எஸ். விஸ்வநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் மாணவர்களின் பேச்சு, பாட்டு, கவிதை ,நடனம், நாடகம், ஆகிய கலை நிகழ்ச்சிகளும் பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து குடும்பத்தின் மகிழ்ச்சிக்கு பெரிதும் காரணம் மகளா? மகனா? என்னும் தலைப்பில் வலிகாம ஆசிரியர் ஆலோசகர் சைவப்புலவர் சைவ சித்தாந்த பண்டிதர் செ. கந்தசத்தியதாசன் (ஜே.பி) நடுவராக கலந்து கொள்ளும் ஆசிரியர்களின் சிறப்புப் பட்டிமன்றமும் இடம் பெறவுள்ளது. ஓ

## அறநெறிப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளது

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்தில் தரம்-1முதல் தரம் 5வரையான மாணவர்களுக்கான ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி ,நன்னெறி ஆகிய அறநெறித் தேர்வுகள் பிற்போடப்பட்டுள்ளன.

இம் மாதம் 12ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவிருந்த தேர்வுகள் பிறிதோர் தினத்தில் நடைபெறுமெனவும் போட்டிகள் நடைபெறவுள்ள தினம் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். ஓ

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட அரியாலை கொழும்புத்துறை பிரதேச வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (A.R.V)இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை ஈச்சமோட்டை சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 2மணி முதல் 3.30 மணிவரை வளன்புரம் மாதர் மன்றத்திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப் பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம. மரியதாசன் கேட்டுக்கொண்டுள்ளார். ஓ

## சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை - 9

ஒரு தலைப்பட்ட மனப்போக்கான வகையில் கைதுசெய்யப்படுதல், தடுத்து வைக்கப்படுதல், நாடு கடத்தப்படுதல் ஆகியவற்றுக்கு எவரும் உட்படுத்தப்படுதலாகாது.

## ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவி தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு



(யாழ்ப்பாணம்)

மாகாண மட்டத்தில் இடம் பெற்ற தமிழ்த் தினப் போட்டியில், குறுநாடக ஆக்கத்திற்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவியான செல்வி ஜயந்தினி கரிகரன் மேற்பிரிவில் முதலிடத்தைப் பெற்று அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்ற உள்ளார் என கல்லூரி அதிபர் ஆறு. திருமுருகன் அறிவித்துள்ளார். ஓ

## உதைபந்தாட்ட போட்டி தொடரில் இறுதிப் போட்டிக்கு தெரிவாகிய அணிகள்

வடமராட்சி வலயப் பாடசாலைகளிற்கு இடையே நடைபெற்று வருகின்ற உதைபந்தாட்ட போட்டித் தொடர்களில் 16 வயதுப் பிரிவில் நெல்லியடி ம.ம.வித்தியும் தேவரையாளி இந்துக் கல்லூரியும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளன.

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்டு வருகின்ற 16 வயதுப் பிரிவில் 21 பாடசாலைகள் பங்குபற்றி லீக் முறையில் போட்டி நடாத்தப்பட்டன. அதில் இருந்து 8 பாடசாலைகள் விலகல் முறை போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டு போட்டிகள் நடைபெற்றன.

நேற்று புதன்கிழமை திக்கம் மைதானத்தில் நடைபெற்ற அரை இறுதி ஆட்டங்களில் முதலாவது போட்டியில் நெல்லியடி ம.ம. வித்தியும் இமையாணன் அ.த.க. பாடசாலையும் மோதின. இப் போட்டியில் நெல்லியடி ம.ம. வி.சிறப்பாக விளையாடி 3:0 கோல் கணக்கில் வெற்றியீட்டி இறுதி ஆட்டத்திற்கு தெரிவாகியது. மற்றைய அரை இறுதி ஆட்டத்தில் தேவரையாளி இந்துக் கல்லூரியும், கொற்றாவத்தை அ.மி.தகவும் மோதின. இப் போட்டியில் தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு கிடைத்த பனால்டியை திறமையாக பயன்படுத்தி 1:0 என்ற கோல் கணக்கில் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

18 வயதுப்பிரிவில் அரை இறுதி ஆட்டங்களில் சிதம்பராக் கல்லூரி எதிர் கொற்றாவத்தை அ.த.க அணிகளும், நெல்லியடி ம.ம.வி.எதிர் உடுப்பிட்டி அ.மி.க.அணிகளும் மோதவுள்ளதாக வடமராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) வி.வல்லிபுரம் அறிவித்துள்ளார். ஓ




## விஜயதசமி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு விஜயதசமி நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற உள்ளது. நிகழ்வில் "நவமலர்" சஞ்சிகையும் வெளியிடப்படவுள்ளது. ஓ

◆◆◆

பனை தென்னை அபவிருத்திச் சபை தலைமை அலுவலகத்தில் இன்று வியாழக் கிழமை காலை 11மணியளவில் விஜயதசமி நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பூஜை பிரார்த்தனை நிகழ்வுகளைத் தொடர்ந்து "கும்ப பூசையின் மகிமை" எனும் பொருளில் சைவ சித்தாந்த பண்டிதர் நித்திய தசிதரன் சொற்பொழிவாற்றவுள்ளார். ஓ

◆◆◆

அச்செழு மத்தி ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் இன்று வியாழக் கிழமை 3 மணிக்கு விஜயதசமி நிகழ்வுகள் நடைபெறவுள்ளது. நிகழ்வில் "வரம் பல நல்கிடும் பராசக்தி" எனும் தலைப்பில் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் சொற்பொழிவாற்றவுள்ளார். ஓ

◆◆◆

திடம்புலம் நரசிங்க வைரவர் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை விஜயதசமி நிகழ்வுகள் நிஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.நிகழ்வில் "நவராத்திரி உணர்த்தும் தத்துவம்" எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார். ஓ

◆◆◆

சுதுமலை தெற்கு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் விஜயதசமி விழா இன்று வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறஉள்ளது.

விழாவில் அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று நரகாசூரனை வதம் செய்கின்ற வன்னி வாழைவெட்டு நிகழ்வும் இடம்பெற்று எழுந்தருளி அம்பாளுக்கு அபிஷேக ஆராதனையும் இடம் பெறும். ஓ

## இதயத்தால் சிந்திப்போம் சமாதான விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். சமூக செயற்பாட்டு மையம் நடத்தும் "இதயத்தால் சிந்திப்போம்" சமாதான விழா 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா , சிறப்பு விருந்தினராக இலங்கைத் திருச்சபை யாழ்.குருமுதல்வர் வண.பிதா எஸ்.பி. நேசகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முகாமைக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி க.தேவராஜாவின் சிறப்புச் சொல்லாற்றுகை, தேடல் அரங்கம், கீதவாகினி இசைக்கச்சேரி மாணவர்கள் வழங்கும் வாத்திய பிருந்தா, யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாணவர்களும், நல்லைக் கலாமந்திர் மாணவர்களும் இணைந்து வழங்கும் "சீதாபஹறர்ணம்" நாட்டிய நாடகம், JASC நிறுவனம் வழங்கும் "கனவு மெய்ப்பட வேண்டும்" நாடகம் ஆகியன இடம்பெறவுள்ளது. ஓ

## செயலமர்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளின் அதிபர்கள், மற்றும் அப் பாடசாலைகளின் இரண்டு ஆசிரியர்களுக்கான அவசர காலக் கல்விச் செயலமர்வு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் நிலையத்தில் இம்மாதம் 16,17,18 மற்றும் 20 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக இதன் பொறுப்பாளர் அ.மனுநீதி தெரிவித்துள்ளார். (ஓ-19)

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

**கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்**

ஜே.மரியசீலன்-125

**சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம்**

கு.துஷாந்தினி-116. ஓ

## வாசிப்பு மாதத்தை முன்னிட்ட போட்டிகள்

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவ கச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினர் தமது எல்லைக்குட்பட்ட மாணவர்களிடையே வாசிப்பு தபேச்சு தகட்டுரை தகவிதை தபொதுஅறிவு த கதை கூலல் ஆகிய ஆகிய போட்டிகளை நடாத்த உள்ளனர். பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள் தமது பாடசாலை ஊடாக இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கும் படியும் அத்துடன் இலக்கிய கருத்தரங்கு படக் காட்சிகள் தகதைவேளை ஆகிய நகழ்வு களிலும் பங்கு பற்றுமாறு சரசாலை நூலகர் இ. தர்மலிங்கம் கேட்டுள்ளார்.(ஓ-29)

## வாணிவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுநூலகத்தின் வாணி விழா இன்று வியாழக்கிழமை கலை நிகழ்வுகளுடன் கொண்டாப்பட உள்ளது. (ஓ-29)

## கடையிற்சுவாமிகள் குருபூசை

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் இருந்து வருகை தந்து யாழ்ப்பாணம் பெரிய கடைப்பகுதியில் பல சித்துக்களைப் புரிந்த கடையிற் சுவாமிகளின் குருபூசை மண்டைதீவில் அவர் தங்கியிருந்த இடத்தில் அவரது பக்தர்களால் வருடாந்தம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ் வருடமும் வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு விஷேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற உள்ளது. அடியார்களைப் பங்குகொண்டு பயன்பெறுமாறு பூஜைப் பொறுப்பாளர்கள் அழைக்கின்றனர். ஓ

## நூல் வெளியீட்டு விழா

கரவெட்டி பிரதேச செயலக சைவ ஆலோசனைச் சபையின் "சிவநெறி" நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் கரவெட்டி பிரதேச செயலரும், சைவ ஆலோசனைச் சபை தலைவருமான சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் க.கணேஷ், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் மா. வேதநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் மாலிசந்தி விநாயகர் ஆலய குரு பிரம்மஸ்ரீ தேவ. ரவீந்திரக் குருக்கள் ஆசியுரை வழங்குவார்.

பிரதமவிருந்தினர் நூலை வெளியிட்டு வைக்க வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா முதற் பிரதியைப் பெறுவார்.

வெளியீட்டுரையை யாழ். பல்கலைக் கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும் ஏற்புரையை சைவ ஆலோசனை சபை உறுப்பினரும், வல்வை சிவகுருநாத வித்தியாலய அதிபருமான ஆ.சிவநாதன் வழங்க உள்ளனர். ஓ

## கௌரி விரதாரம்பமும் மானம்பூ உற்சவமும்

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை கௌரி விரதாரம்ப நிகழ்வும், மானம்பூ விழா உற்சவமும் சிறப்பாக நடைபெறவுள்ளது. ஓ

## கட்டடத் திறப்பு விழா


ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க நெறிப் பாலர் முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று முற்பகல் 7 மணிக்கு, சன்மார்க்க மகளிர் சனசமூக நிலையத் தலைவர் திருமதி மல்லிகா ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீசன், சிறப்பு விருந்தினர்களாக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன், ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை அதிபர் செ. சிவ நடராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். ஓ

# நோத்முதல் கோபல்லவா வரை 121

**சேர் .பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் (14.09.1853-09.01.1924)**

எங்கள் நாட்டு மக்கள் தங்கள் பொறுப்புக்களைத் தாங்களே ஏற்று நடத்துதல் வேண்டும். அவர்கள் பிழைவிட்டாலும் கவலையில்லை. அவர்களிடம் ஊக்கமும் பொறுப்பும் வல்லபமும் பிறக்கும் .அவர்கள் தங்கள் சக்தியைத் தம் நாட்டை வளப்படுத்த உபயோகிப்பார்கள். ஆங்கிலேயர் வருமுன் எங்கள் அரசியல் முறையில் கிராமங்களின் நிர்வாகப் பொறுப்பு கிராமமக்களிடமே இருந்தது.ஆங்கிலேயர் அதனை நிர்மூலமாக்கிவிட்டனர் என எழுதினர்.



ஈ.டபிள்யு.பெரேரா (1875-1953)



எப்.ஆர்.சேனநாயக்க (1882-1926)



சேர்.ஜேம்ஸ்பீரிஸ் (1859-1954)

இத்தகைய கடிதத்துக்கு அருணாசலத்தின் நண்பன் டிக்பி என்ன எழுதினார் என்பதையும் நாம் அறிந்துகொள்ளுதல் வேண்டும்.'' அன்புள்ள அருணாசலம் அவர்களே, 1870 ஆம் ஆண்டுக்குபின் வந்த காலத்தில் இலங்கையில் இருந்த போது நாங்கள் வாலிபத் தோழராய் இருந்தோம். நாங்கள் கண்ட கனவு உங்களுக்கு நினை விருக்கலாம். அந்தக்காலத்தில் நாங்கள் ஊக்கம் மிகுந்திருந்தோம். உத்தியோகத்தி லிருந்து தாங்கள் இளைப்பாறுதல் வேண் டும். நாங்கள் கண்ட கனவு நனவாதல் வேண்டும் என்பதே என்னுடைய வேணவா. இதைவிட வேறு இலட்சியம் என் மனதில் இல்லை. என் அருமை நண்பரே! தங்களுடன் தோழோடு தோழாக நின்று தங்கள் இலட்சியத்திற்காகப் போராட நான் தயாராக இருக்கின்றேன்''

சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் கலகம் எழுந்த காலத்தில் சேர்.

**மீள் பார்வை**

இராமநாதன் செய்த சேவை ஒருபுறமிருக்க சேர்.அருணாசலம் ஆற்றிய பணியை திரு. E.W. பெரேரா அழகாகக் கூறியுள்ளார். "இராணுவச் சட்ட ஆட்சிக்காலத்திலே இலங்கை முழுவதும் இளவு வீடுபோல இருளடைந்திருந்த காலத்தில் சேர்.பொன் அருணாசலம் சுவாலித் தெரியும் சுடர்போன்று கோபாவேசத்துடன் சீறியெழுந்து அக்கிரமங்களைத் தடுத்து நிறுத்தவும், அமைதியை நிலை நாட்டவும் தம்மாலான அளவில் உழைத்தார். அவர் செய்த முயற்சியாலேயே துன்பமுற்ற மக்களுக்கு ஓரளவுக்காயினும் நிவாரணமளிக்கப்பட்டது''

சிவில் சேவையிலிருந்து இளைப்பாறிய சேர். அருணாசலம் *சமூகசேவை* செய்வதில் ஆர்வம் கொண்டார். அவர் இங்கிலாந்திலிருந்த காலத்தில் அங்குள்ள சமூகசேவை ஸ்தாபனங்களுக்குச் சென்று அவை அலுவலாற்றும் முறைகளை நேரிற் கண்டு அனுபவம் பெற்றிருந்தார்.

அவர் இலங்கைக்கு மீண்டதும் பொன்கிழார் என்னும் மாளிகை யில் சமூகசேவை செய்வதில் ஆர்வமுள்ள தம்முடைய நண்பர்களை 19.11.1914இல் அழைத்து விருந்து கொடுத்து கலந்துரையாடினார். அதில் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தையும், கல்வித் தரத்தையும் உயர்த்து தல் வேண்டும் என்று சங்கர்ப்பஞ் செய்தார். அதற்காக இராப் பாடசாலைகள் அமைத்தும், பிற வசதிகளை நிருவகித்தும் தினந்தோறும் எட்டுமணி நேரம் சமூக சேவையில் ஈடுபட்டார்.

### சர்வ கலாசாலையின் தந்தை

பொதுமக்களின் தரத்தை உயர்த்த பாடுபட்ட அருணாசலம் இலங்கை ***சர்வகலாசாலையின் தந்தை*** எனவும் போற்றப்படுபவர். பேராதனையில் அவருடைய நினைவு மண்டபம் அதற்கு சான்று பகர்கின்றது. அவர் கேம்பிரிஜ் சர்வகலாசாலையில் கல்விகற்று மீண்ட நாட் தொடக்கம் இலங்கைக்குத் தனியாக ஒரு சர்வகலாசாலை அமைத்தல் வேண்டும் என கிளர்ச்சி செய்து வந்தார். "உரோம இராச்சியத்தைப் பற்றியும், இங்கிலாந்தின் பேரரசைப் பற்றியும் படிக்கின்ற எங்கள் மாணவர்கள் எல்லாளன் துட்டகாமினி கதிர்காமம் முன்னீஸ்வரம் மகியங்கனையைப் பற்றி அறியாதிருப்பது வருந்தத்தக்கது'' இத்தகைய கருத்தை அருணாசலம் அவர்கள் 19.1.1906 இல் தாம் கூட்டிய பகிரங்கக் கூட்டத் தில் சர்வகலாசாலையின் இன்றியமையா மையைப் பற்றிப் பேசும் போது குறிப்பிட்டார். இலங்கைச் சர்வ கலாசாலைக்கு வித்திட்டவர் அருணாசலம் அவர்களே.

அருணாசலத்தின் அரிய முயற்சியின் பயனாகவே ***சர்வகலாசாலைக் கல்லூரி*** கொழும்பில் அமைக்கப்பட்டது. அது உருவானதும் அவர் அதற்குத் தாராளமான உதவி செய்தமையோடு தமது அரிய நூல்களையும் உபகரித்தார். மாணவர் பரிசு பெறும் பொருட்டுப் பெரு நிதியுதவியும் தமது வள்ளன்மையின் வளத்தை இலங்கையின் எதிர்கால மாணவ மாணவிகளுக்கு இன மத மொழி வேறுபாடு கருதாது வரையாது வழங்கினார்.

இலங்கையில் அருணாசலத்தின் காலத்தில் அவர் மூச்சுப்படாமல் எந்தத் தலைவரும் செயலாற்றியது கிடையாது. ***எங்கள் அரசியல்***



***தேவைகள்*** என்னும் தலைப்பில் 22.4.1917 இல் விக்ரோறியா நினைவு மண்டபத்திலே அவர், கேட்டார் இறும்பூதெய்தும் வண்ணம் பேசினார்.

அப்பேச்சு இலங்கை வாசிகளைத் தட்டி எழுப்பிற்று. அது இலங்கையில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்க வழிகோலிற்று.

க.சி.குலரத்தினம்


ஆங்கிலேய அரசியற் பண்டிதர்களையும், யாப்பு வல்லுநரையும்,பேரரசுவாதிகளையும் அது வெகுவாகச் சிந்திக்க வைத்தது. அப் பேச்சின் எதிரொலி வீதிவாய்க் கேட்டவர்கள் விம்மி விம்மி மெய்மறந்து பெருமிதங் கொண்டு சுதந்திரதாகங் கொண்டார்கள்.

''பணிக்குழு ஆட்சியாளரின் சங்கிலித் தளையாற் பிணிப்புற்று நாங்கள் எங்கள் அதிகாரம், பொறுப்பு என்பன அற்றவர்களாய் எங்கள் இயல்பு,திறமை ஆகியன குறைக்கப்பட்டவர்களாய், தற்குறைவுணர்வினால் ஏற்பட்ட விரக்தியினால் நலிந்து வாழுகின்றோம்.

எங்கள் சொந்த இயல்பில் நாங் கள் பூரணமாய் வளருவதற்கு விடாமல் எங்களைக் பணிக்குழு ஆட்சியாளரின் பரிபாலனம் தடைசெய்கின்றது. குடியேற்ற நாட்டு முறையில் இலங்கையில் நிலவுகின்ற ஆட்சி எங்கள் கழுத்தை நெரிக்கின்றது''

சேர். அருணாசலம் பேசியபோது தமது கோரிக்கையை அரண் செய்வதற்கு நானாவித புள்ளிவிபரங்களையும் எடுத்துக் காட்டி ஆணித்தரமாக பேசினார்.அவருடைய பேச்சின் பெறுபேறாக உண்டாக்கிய பொதுசன அபிப்பிராயத்திலே தான் ***இலங்கைச் சீர் திருத்த சபையும்***, அதன்வழி ***இலங்கைத் தேசிய காங்கிரஸ்*** என்னும் மகாசபையும் உருவாயின. (தொடரும்)

# எமது பாரம்பரிய பிரதேசத்திற்குப் பொருத்தமான மாற்றுச்சக்தி வளங்கள்: ஒரு புவியியல் நோக்கு




இந்திய முறை "ஹோபர் காஸ்" முறையெனவும் வழங்கப்படும். இந்தியாவில் ஏழுபேர்கொண்ட ஒரு குடும்பத்தின் தேவையைப் பூர்த்தி செய் யக் கூடிய சாண எரிவாயுச்சாதனத்தை 20,000ரூபா (2000 ஆண்டுக் கணிப்பீடு) செலவில் அமைத்துக்கொள்ள முடியுமென்கின்றனர்.

சீன முறையிலான எரிவாயுச் சாதனம் இந்திய முறையைவிட சிக்கனமானதும் சுலபமாக அமைக்க கூடியதுமாகும். இந்தியச் சாண எரிவாயுச் சாதனத்தைவிட அரைப்பங்கு செலவில் இதனை அமைத்துக் கொள்ளலாம். ஆண்டுக்கு ஒரு முறை துப்புரவுப் பராமரிப்பு பணியை மேற்கொண்டால் போது மானது.

இரண்டு அல்லது மூன்று மாடுகளிலிருந்து நாளொன்றுக்கு 15 கிலோ சாணம் பெறப்படுகின்றதெனக் கொள்வோம். இதிலிருந்து பெறப்படும் எரிவாயுவானது ஒரு கன மீற்றராக (2.4 கன அடியாக) இருக்கும் ஒரு கன மீற்றர் எரிவாயுவின் பெறுமதி பின் வருமாறு,

- 2.0 கிலோ கிராம் விறகு
- 0.6 லீற்றர் மண்ணெய்
- 0.5 லீற்றர் பெற்றோல்
- 0.4 லீற்றர் டீசல்
- 3 பேருக்கு 3 வேளை சமைப்பதற்கான எரிசக்தி
- 1 மணித்தியாலத்திற்கு 6 "பெற்றோல் மக்ஸ்" விளக்குகளை எரிவூட்டுவதற்கும் போதுமான வலு.
- மணித்தியாலயத்திற்கு 40w ஒளிசக்தி கொண்ட 25 மின்குமிழை ஒளியூட்டுவதற்கு போதுமான வலு.

ஆகியனவற்றுக்குத் தேவைப்படும் மொத்த சக்திக்குச் சமமானதெனக் கணிக்கப்பட்டுள்ளது. எமது பிரதேசத்தின் விவசாய உற்பத்தியானது பயிர்ச்செய்கையுடனும் விலங்கு வளர்ப்புடனும் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்படும் பண்புகொண்டதாக பாரம்பரியமாகவே இருந்து வருகின்றது. எமது பாரம்பரியத்தில் மாடுகளை செல்வ வளமாகக்




கொள்ளும் வழக்கம் உள்ளது. இதனால் எமது பிரதேசத்தில் வாழ்கின்ற கிராமிய விவசாயக் குடும்பங்கள் ஒவ்வொன்றும் மாட்டு வளர்ப்பில் அக்கறை கொண்டுள்ளன.

பலர் பட்டிமாடுகளைக் கொண்டவர்களாகவும் உள்ளனர். எனவே சாண எரிவாயு சக்தியை கிராமத்தின் ஒவ்வொரு வீட்டிலும் பெறச் செய்வது இலகுவாக நடைமுறைப் படுத்தக் கூடிய திட்டமேயாகும்.

### 4.0 கடல் சக்தி வளம் (Oceanic Energy Resource)

எமது பாரம்பரிய் பிரதேசத்திற்குப் பொருத் தமான மாற்றுச்சக்தி வளங்களில் சூரிய சக்தி, காற்றுச் சக்தி, உயிர்ச்சுவட்டு (திணிவு) எரி சக்தி என்பன எவ்வகையில் பயன்படுத்தலாம் என்பதைப் பற்றி சென்ற வாரங்களில் வெளி வந்த கட்டுரைகளில் ஆராய்தோம்.

இக் கட்டுரை கடல் சக்தி வளத்தை எமது பிரதேசத்திற் குப் பொருத் தமான முறையில் எவ்வகையில் பயன்படுத்தலாமென்பது பற்றி ஆராய்கின்றது.

புவிக்கோளத்தில் 70 வீதம் கடல் பரப்பாகக் காணப்படுகின்ற போதிலும் மனிதன் கடல் வளத்தை இன்று வரை முறையாகவும் திறமையாகவும் பயன்படுத்தவில்லை என்பது நிதர்சனம். உணவின்றி மனித உயிரிகள் மடியும் வறுமைநிலை பரவ லாக உலகெங்கும் காணப்படும் நிலை யிற் கூட கடல் வளத்தை உணவுத் தேவைக்காக பயன்படுத்தும் அபிவிருத்தி நுட்பம் அரிதாகவே வளர்ந்துள்ளது.

புவியிற் பரந்துள்ள கடல் பரப்பி லிருந்து உணவாகப் பெறத்தக்க உள்ளார்ந்த வளம் 100 எனக்கொண்டால் மனிதன் இன்று வரை அதில் 1 வீதத்தையே பயன்படுத்துகின்றான் என்பது வியப்பளிக்கும் தகவல் ஆகும். இதுபோன்றே கடலினைச் சக்தி தரும் வளமாக பயன்படுத்துவதும் மிக அரிதாகவே உள்ளது.

ஆனால் இதற் கான வாய்ப் புகளோ அதிகம்.

கடலில் இருந்து 4 வழிகளில் சக்தி பெறப்படலாம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

1 கடல்வற்றுப் பெருக்கு நிகழ்வைப் பயன்படுத்தி சக்தி பெறும் வழி.

2 கடல் அலைகளில் இருந்து சக்தி பெறும் வழி.

3 ஆழ்கடலில் காணப்படும் நீரோட்டத்தைப் பயன்படுத்தி சக்தி பெறும்வழி

4 கடல் "மீத்தேன்" வாயுப்படிவுகளிலிருந்து சக்தி பெறப்படும் வழி.

கடல்வளத்திலிருந்து மேற்படி நான்கு வழிகளிலும் சக்தி பெறும் வாய்ப்புக்கள் எமது பிரதேசத்தில் சாதகமாகவுள்ளன.

**பேராசிரியர் இரா.சிவச்சந்திரன்**
தலைவர் ,சமூகவியல்துறை
இணைப்பாளர்,புறநிலைப்படிப்புகள் அலகு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

உதாரணமாக யாழ்ப்பாணக்குடா கடலை நோக்கும் போது இங்கு சுண்டிக்குளம் முதல் ஆனையிறவு, பூநகரி, கச்சாய், குருநகர், பண்ணை, அராலி, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளை உள்ளடக்கும் குடாக் கடற் பரப்பு வாய்ப்பான கடல்நீரோட்டத்தைக் கொண்ட பகுதியாகக் காணப்படுகின்றது.

இப்பகுதிகளில் பருவகாலத்திற்குரிய வற்றுப்பெருக்கு, நாளாந்த வற்றுப்பெருக்கு என்பவற்றை அடையாளம் காணலாம். இங்கு வற்றுப்பெருக்கு காலம், உயரம் என்பன நன்கு அவதானிக்கப்பட்டு சக்தி பெறும் வழிகள் கண்டறியப்பட வேண்டும். (தொடரும்)

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு

## க.பொ.த. சாதாரண பரீட்சை 2008 - பயிற்சி வினாத்தாள்-கணிதம்

**பகுதி A பரீட்சை III நேரம் -40 நிமிடங்கள்**

### A — Answer

1. $\frac{1}{3} + \frac{1}{3}$ ________

2. அடுத்துவரும் முக்கோணி எண்கள் 1, 3, 6, 10, ___, ___ ________

3. | 100° , 60° , 90° , 120° , 35° |
   இவற்றில் கூர்ங்கோணங்கள் ____° ____°

4. 4cm x 3cm ______$cm^2$

5. 1100mℓ = □ ℓ + □ mℓ ___ℓ ___mℓ

6. (-5) + (-3) ________

7. ÌÑI ÌÑI I ________

8. 2.3 + 1.3 ________

9. 4x = 8 ஆயின், x சமன் ________

10. 60° ,100° ,20° உடைய முக்கோணி அமையுமா? ________

### B — Answer

1. 1/3 இற்கு சமவலுவான பின்னம் ஒன்று எழுதுக. ________

2. 30 இலும் குறைந்த முக்கோணி எண்கள் எத்தனை உண்டு? ________

3. 40° இன் மிகை நிரப்பு கோணம் யாது? ________°

4. பக்க நீளங்கள் 5cm, 4cm உடைய செவ்வகமொன்றின் பரப்பளவு என்ன? ________$cm^2$

5. 1500mℓ ஐ ℓ இல் தருக. ________ℓ

6. சுருக்குக. (-10) + (+5) + (-2) ________

7. 2,3,3,4,6,7,8 இன்
   a) ஆகாரம் யாது?
   b) இடையம் யாது?
   a)________
   b)________

8. 12.3 + 0.13 ________


9. தீர்க்க. 2x + 7 = 10 ________

10. இரு சமபக்க முக்கோணி ஒன்றின் ஒருகோணம் 100° எனின், மற்றைய இரு கோணங்களின் பருமன்களைக் காண்க. ____° ____°


### C — Answer

1. $\frac{2}{5}$ $\frac{7}{14}$ ஐ >, < ஆகியவற்றில் பொருத்தமான குறியீட்டின் மூலம் தொடர்புபடுத்துக. ________

2. $15^{வது}$ முக்கோண எண்ணைத் தருக. ________

3. 


   உருவில் உள்ள தகவல்களுக்கு ஏற்ப
   a)நிரப்பு கோணச் சோடியைத் தெரிக.
   b)மிகை நிரப்பு கோணச் சோடியைத் தெரிக.
   a)________
   b)________

4. 


   செவ்வகம் ABCD இல் AB=12cm, BC=7cm ஆகும். ABCD இன்
   a) சுற்றளவு யாது?
   b) பரப்பளவு யாது?
   a)______cm
   b)______$cm^2$


5. 2ℓ 350mℓ + 3ℓ 750mℓ ஐ ℓ இல் தருக. ________ℓ

6. $\frac{(-5) + (+5)}{(-2)}$ ஐ சுருக்குக. ________

7. 7,3,4,5,3,10,9 ஆகிய ஈட்டுக்களின்,
   a) ஆகாரத்தைக் காண்க.
   b) இடையத்தைக் காண்க.
   a)________
   b)________

8. சுருக்குக. 111.1 + 11.11 + 1.111 ________

9. தீர்க்க. 2 ( 2x – 3 ) = 10


10. 


   a)x இன் பெறுமானம் யாது?
   b)y இன் பெறுமானம் யாது?
   a)______°
   b)______°

### D — Answer


1. சுருக்குக. $1\frac{3}{4} + 2\frac{1}{2} + 1\frac{1}{4}$

2. $\frac{21 \times 20}{2}$ எத்தனையாம் முக்கோணி எண்?

3. 


   உருவில் x,y,z இன் பெறுமானத்தைக் காண்க.
   x=________°
   y=________°
   z=________°

4. ஒரு சதுரத்தின் பரப்பளவு $169cm^2$.
   a) ஒருபக்க நீளம் யாது?
   சுற்றளவு யாது?
   a)________cm
   b)________cm

5. 


   இப்பாத்திரத்தின் கொள்ளளவு 1லீற்றர் ஆகும். தரப்பட்டுள்ள தகவல்களுக்கேற்ப பாத்திரத்தில் எத்தனை ml திரவம் உண்டு?
   ________ml


6. a = -3 எனின், 2a + 3 இன் பெறுமானத்தைக் கணிக்க. ________

7. 7 மாணவர்களின் சராசரி உயரம் 125cm. அவர்களில் 4 மாணவர்களின் சராசரி உயரம் 131cm ஆயின், மிகுதியாயுள்ள 3 மாணவர்களின் சராசரி உயரம் யாது? ________cm

8. 14.3+5.25–7.463 ஐச் சுருக்கி விடையை முதலாம் தசம தானத்திற்கு திருத்தமாகத் தருக. ________

9. தீர்க்க. $\frac{x-3}{5} = 6$

10. உருவில் $B\hat{C}X = D\hat{C}X$ ஆகும்.
   a) ∠ACB இன் அளவு யாது?
   b) ∠AXC இன் அளவு யாது?




   a)________°
   b)________°

| | A | B | C | D | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| புள்ளிகள் | | | | | |

ஜே.மரியநாயகம்

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு
## க.பொ.த. உயர்தர பரீட்சை 2009
## பாட அலகு ரீதியான விளக்கங்கள்

ரி. பாலசுப்பிரமணியம்

03

# உயிரியல்

## குருதி இழையம்


**ஒற்றைக்குழியம் (Monocyte)**



- ஒப்பீட்டளவில் பருமனில் பெரியது(16 - 20 μm )
- அவரைவித்து / சிறுநீரக உருவமான கருவைக் கொண்டிருக்கும்.
- உருவாகியதில் இருந்து 30 - 40 மணித்தியாலம் வரையே குருதியில் காணப்படும். அதன்பின் குருதியைவிட்டு வெளியெறி ஐதான தொடுப்பிழையத்தில் பெருந்தீன்கலமாகக் (Macrophage) காணப்படும்.
- தொழில்: 1. தின்குழியச் செயற்பாட்டின் மூலம் பிற உடல்களை அழித்தல்.
  2. இறந்த கலங்கள்ள அழித்துத் துப்பரவு செய்தல்.

ஒற்றைக்குழியம்/பெருந்தீன்கலம் Interleukin – 1 என்னும் பதார்த்தத்தைத் தொகுத்து விடுவிக்கும் இது நுண்ணங்கித் தொற்று ஏற்படும் சந்தர்ப்பங்களில் பரிவகக்கீழ் பகுதியில் தொழிற்பட்டு உடல் வெப்பநிலை அதிகரிக்கக் காரணமாகஉள்ளது.

**நிணநீர்க்குழியம் (Lymphocyte)**



- ஒப்பீட்டளவில் பருமனில் சிறியது.
- செவ்வென்பு மச்சையில் உற்பத்தியாகும், நிணநீர் இழையங்களில் முதிர்வடையும்.
- நிணநீர்க்குழிய உற்பத்தியுடன் தைமோசின் என்னும் நொதியம் தொடர்புபட்டிருக்கும்.
- **T** – வகை நிணநீர்க்குழியம், **B** - வகை வகை நிணநீர்க்கள் நீண்ட ஆ நிணநீர்க்குழியம் என்னும் இருவகை காணப்படும்.
- இதில் **T** - வகை நிணநீர்க்குழியம் **AIDS** தொற்றுக்கு உள்ளாகக் கூடியது
- **B** - வகை நிணநீர்க்குழியமானது குருதியை விட்டு வெளியேறி ஐதான தொடுப்பிழையத்தில் முதலுருக்கலமாகக் காணப்படும்.
- குருதிச் சுற்றோட்டத்துடனும், நிணநீர் இழையம் மண்ணீரல் என்பவற்றிலும் இது காணப்படும்.
- தொழில: பிறபொருளெதிரியைச் சுரப்பதன் மூலம் நிரப்பீடனத்தை ஏற்படுத்துதல்.

சில வகை நிணநீர்க் குழியங்கள் நீண்ட ஆயுட்காலமுடையவை

| Cells | எண்ணிக்கை$10^9$/li | சதவீதம் |
|---|---|---|
| *Granulocyte* | | |
| Neutrophils | 2.5 – 7.5 | 40 -75 |
| Eosinophils | 0.04-0.44 | 1 - 6 |
| Basophils | 0.015 – 0.1 | <1 |
| *Agrnulocyte* | | |
| Monocyte | 0.2 – 0.8 | 2 - 10 |
| Lymphocyte | 1.5 – 3.5 | 20 - 50 |
| Total | 5 – 9 | 100 |

குருதிச் சிறுதட்டுக்களின் உற்பத்தியைத் தூண்டும் ஓமோன் **Thrombopoietin** எனப்படும் சிறுநீரக ஓமோன் ஆகும்.

**குருதிச் சிறுதட்டுக்கள் (Thrombocytes / Platelets )**

குருதியிலே செங்குழியங்களிற்கு அடுத்ததாக உயர்வு எண்ணிக்கையில் $200x10^9/l$ – $350x10^9/l$ காணப்படுகின்றன. செவ்வென்பு மச்சையில் மாகருக்குழியங்களில் (Megac aryocyte) இருந்து இவை உருவாகின்றன ஒழுங்கற்ற உருவானவை பருமனில் மிகவும் சிறியது(2 - 4 μm), கரு அற்றவை
8 – 11 நாட்கள் உயிர்வாழக் கூடியவை. மண்ணீரலில் சேமிக்கப்பட்டு காயம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் குருதியோட்டத்துடன் விடப்படும்.

- முதிர்ந்த/இறந்த சிறுதட்டுக்கள் மண்ணீரலில் சிதைக்கப்படுகின்றன.

**குருதியின் தொழில்கள்**

1. **கொண்டு செல்லல்**
   - ஒட்சிசனை சுவாச மேற்பரப்பிலிருந்து இழையங்களிற்கு கொண்டு செல்லும்.
   - காபனீரொட்சைட்டை இழையக்கலங்களிலிருந்து சுவாச மேற்பரப்பிற்கு கொண்டு செல்லும்
   - போசணைபொருட்களை உணவுக்கால்வாயிலிருந்து இழையக் கலத்திற்கு கடத்துதல்.
   - ஓமோன்களை கானில் சுரப்பிகளிலிருந்து விளைவு ஏற்படுத்தும் அங்கம்/ இலக்கு கலத்திற்குக் கடத்துதல்.
   - கழிவுப்பொருட்களை இழையத்திலிருந்து கழிவகற்றும் அங்கத்திற்குக் கடத்துதல்.
   - வெப்பத்தை உடல் முழுவதும் பரவச் செய்தல்
2. பாதுகாத்தல்
   a. பிறபொருளெதிரிகளைத் தொகுத்து நிர்ப்பீடனத்தை ஏற்படுத்தி நோய்த் தொற்றிலிருந்தும் பாதுகாப்பை ஏற்படுத்தும்.
   b. பிற உடல்களை தின்குழியச் செயன்முறைமூலம் அழித்து நோய்த்தொற்றிலிருந்தும் பாதுகாப்பை ஏற்படுத்தும்.
   c. குருதி உறைதலை நிகழ்த்தி குருதி இழப்பைத் தடுத்து பாதுகாப்பை ஏற்படுத்தல்
   d. குருதியின் PH மாறாது பேணுதல் தாங்கல் தொழிற்பாடு

**மனிதனிலே காயங்கள் ஏற்படுதல்**

காயம் ஏற்படும் போது காயம் ஏற்பட்ட இடத்தில் பின்வரும் மூன்று முக்கிய செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

1. காயம் ஏற்பட்ட இடத்திலே குருதிக் கலன்களில் கலன் ஒடுக்கம் ஏற்படுதல் - இதன் காரணமாக காயத்தினூடு வெளியேறும் குருதியின் அளவு குறைக்கப்படும்.
2. காயம் ஏற்பட்ட இடத்தில் குருதிச் சிறுதட்டுக்களாலான தற்காலிக அடைப்பு(Platelet plug) ஏற்படுதல் அதனால் குருதிவெளியேறல் குறைக்கப்படும்.
3. குருதி உறைதல் (blood clotting/Coagulation)

கலன் ஒடுக்கத்தை ஏற்படுத்தும் இரசாயனப் பதார்த்தம்,
- **Serotonin** – சிறுதட்டு சுரக்கும்.
- **Thromboxanes** – காயப்பட்ட இடத்தில் கலன்சுரக்கும்.

❖ **குருதியுறைதல் (Blood clotting)**

காயம் ஏற்பட்ட இடங்களில் உடலுக்கு வெளியே குருதியானது கட்டியாகின்ற / திண்மமாகின்ற செயன்முறை குருதியுறைதல் எனப்படும்.
குருதி உறைதல் ஒரு பாதுகாப்புச் செயன்முறை ஆகும். இதன் விளைவாக,
1. தொடர்ச்சியான குருதி இழப்பு தடுக்கப்படும்.
2. காயங்களினூடாக பிற உடல் புகுவது / நோய்த்தொற்று ஏற்படுவது தடுக்கப்படும்

**Note:**
ஆரோக்கியமான உடல் நலம் மிக்க மனிதனில் குருதி உறைதல் செயற்பாடுகள் 30 செக்கன்களில் ஆரம்பித்து 4 - 5 நிமிடங்களில் பூர்த்தியாகும்.

**மனிதனில் குருதியுறைதலுக்கு அவசியமான காரணிகள்**
1. பரம்பரை அலகு (gene)
2. Thromboplastin
3. Prothrombin
4. Fibrinogen
5. Vit-K
6. $Ca^{2+}$
7. முதலுரு நொதியங்கள் (plasma enzymes)

**Thromboplastin/Tissue factor**

இது ஒரு இலிப்போ புரதமாகும், காயம் ஏற்பட்ட இடங்களில் குருதிச் சிறுதட்டுக்கள் உடைவதனாலும், காயம் ஏற்பட்ட இடங்களிலுள்ள இழையங்கள் சுரப்பதனாலும் இது பெறப்படும். - இது Heparin ஐ செயல் இழக்கச் செய்யக்கூடியது.

**Prothrombin**


இது ஈரலில் தொகுக்கப்படுகின்றது இது தொகுக்கப்பட்ட Vitamin.- K அவசியமாகும் இது Thromboplastin உடனும், $Ca^{2+}$ சேர்ந்து Thrombin ஐ ஆக்கும்.

$$\text{Prothrombin} + \text{Thromboplastin} \xrightarrow{Ca^{2+}} \text{Thrombin}$$

**Fibrinogen**

இது ஒரு முதலுருப்புரதமாகும். ஈரலில் தொகுக்கப்படுகின்றது. இது fibrin நார்களை ஆக்குகின்றது. இதுவே மனிதனில் குருதி உறைதலை நிகழ்த்தும்.

**குருதியுறைதற் பொறிமுறை**




**குருதிக்கூட்டங்கள் (Blood Groups)**

மனிதனின் செங்குழிய மென்சவ்விலே Agglutinogen என்னும் உடல் எதிரியாக்கி (antigen) உண்டு. குருதி முதலுருவிலே Agglentinin என்னும் பிறபொருள் எதிரி உண்டு (antibody) இவற்றின் பொருந்துகையின் அடிப்படையிலேயே மனிதனின் குருதிக் கூட்டம் தீர்மானிக்கப்படுகின்றது. மனிதனின் பின்வரும் குருதிக் கூட்டங்கள் காணப்படுகின்றன.

1. ABO – குருதிக் கூட்டம்
2. RH - காரண கூட்டம்
3. Mn - குருதிக் கூட்டம்

(தொடரும்)

# இந்தியாவின் அக்கறையின்மையால்தான் தமிழர்களை ஒட்டுமொத்தமாக அழிக்க ஸ்ரீலங்கா முடிவு

## தமிழகத்தில் இருந்து வெளிவரும் தினமணி நாளேடு குற்றச்சாட்டு

(சென்னை)

இந்தியாவின் அக்கறையின்மை யால் தான் இலங்கைத் தமிழர்களைஒட்டு மொத்த மாக அழிக்க சிறிலங்கா அரசும் படையின ரும் முடிவு செய்துள்ளனர் என்று தமிழ் நாட்டி லிருந்து வெளிவரும் தினமணி நாளேடு அதன் நேற்றைய வெளியீட்டின் ஆசிரியர் தலையங்கத்தில் குற்றஞ் சாட்டியுள்ளது.

ஆசிரிய தலையங்கத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

பாவப்பட்ட ஜென்மங்கள் என்கிற வார்த் தைப் பிரயோகத்துக்கு மிகவும் பொருத்தமா னவர்கள் யார் என்று கேட்டால் இலங்கை யில் வாழும் யாழ்ப்பாணத் தமிழர்கள் தான். காஸ்மீர் பண்டிட்டுகளாவது அகதிகளாக அவர் களது உறைவிடத்திலிருந்து தான் விரட்டப் பட்டுவிட்டனர். ஆனால்இலங்கை வாழ் தமி ழர்களுக்கு அதற்கும் வழியில்லாமல் அங் கேயே இலங்கை இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்படுவது தான் தலையெழுத்து போலி ருக்கிறது.

அவர்களுக்குக் கொஞ்ச– நஞ்சம் பாது காப்பு அளித்து வந்த விடுதலைப்புலிகளும் பலமிழந்த விட்ட நிலைமை ஆதரவுக்கரம் நீட்ட வேண்டிய இந்திய அரச அணு சக்தி ஒப் பந்தம் பற்றிய கவலையில் இலங்கை என் கிற அண்டை நாடு இருப்பதையே மறந்த போய் விட்ட தாகத் தோன்றுகிறது.

சீதோஷ்ண நிலை மாற்றம் பொருளா தார நெருக்கடி போன்ற பிரச்சி னைகளில் மூழ்கி இருக்கும் சர்வதேச நாடுகளுக்கு இந்து மகா சமுத் திரத்தில் இருக்கும் சிறிய தீவான இலங்கையில் வசிக்கும் சிறுபான்மை மக்க ளான தமிழர் களைப்பற்றிக் கவலைப் ப்ட நேரமில்லை

தேயிலைத் தோட்டங்களில் கூலித் தொழி லாளர்களாக வேலை செய்யச் சென்ற இந் திய வம்சாவளித் தமிழர்களை வெளி யேற்ற வேண்டும் என்று கோரிக்கை எழுந்த அறுபது களில் தொடங்கி இப்போது எஞ்சி இருக்கும் தமிழர்களையும் அழித்து விடுவது என்கிற இலங்கை அரசின் இராணுவத்தாக்குதல் வரை, ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. அது, இந்தியா இந்தப் பிரச்சினையை சரியாக அணுகவில்லை என்பதுதான்.!

இந்திரா காந்தி பிரதமராக இருந்தவரை, இலங்கை அரசு இந்தியா என்ன சொல்லு மோ, என்ன செய்யுமோ என்று பயந்தது. அத னால், தமிழர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை யை சற்று கவனத்துடன் கையாள முற்பட் டது. ராஜீவ் காந்தியின் மரணத்துக்குப் பிறகு, யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு இந்தியாவின் ஆதரவு கிடையாது என்பதைப் புரிந்து கொண்டது முதல், இலங்கையின் சிங்கள அரசும். இராணுவமும் திட்டமிட்டுத் தமிழர் களை அழிப்பதிலும். தமிழர் வாழும் பகுதிக ளில் சிங்களவர்களைக் குடியேற்றுவதிலும் முனைப்புடன் செயற்படத் தொடங்கின.

வசதி படைத்த யாழ்ப்பாணத் தமிழர்கள் இலங்கையை விட்டு வெளியேறி,ஐரோப்பா, அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளில் குடியேறி விட்டனர். அவர்களது வாரிசுகள் அந்தந்த நாடுகளில் படித்து, வளர்ந்து, தாய் நாடு பற்றிய சிந்தனையோ பற்றோ இல்லாத வர்களாக வளர்ந்துவிட்டனர். முந்தைய தலை முறையினரும் சரி, போராளிகளுக் குப் பொருளுதவி அளித்து வந்ததுடன் தங் களது கடமை முடிந்தது என்று ஓய்ந்து விட்டனர்.

இந்த நிலையில், இந்தியாவின் அக்கறை யின் மையைத் தனக்குச் சாதகமாக்கி கொண்டு, இலங்கைத் தீவிலிருந்து தமிழர்களை ஒட்டு மொத்தமாக அழித்துவிடுவது என்று இலங்கை அரசும் இராணுவமும் தீர்மானித்து விட்டதுபோலத் தோன்றுகிறது. கடந்த சில வாரங்களாக அங்கே இராணுவம் நடத்தும் தாக்குதல்கள் நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களின் உயிரைக் குடித்திருக்கிறது. விடு தலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்துகி றோம் என்கிற பெயரில், அப்பாவித் தமிழர் களைக் கொன்று குவித்து, இனப்படு கொலை நடத்தும் இலங்கை, அரசைக் கேள்வி கேட் பார் இல்லாத நிலைமை.

பிஜித் தீவில் இந்தியர்கள் பிரச்சினை, வளைகுடா நாடுகளில் இந்தியர்கள் பிரச் சினை, ஏன் உகண்டா மற்றும் தென்னா பிரிக் காவில் இந்தியர்களுக்குப் பிரச்சினை என் கிற போதெல்லாம் வெகுண்டெழுந்து செயற் படும் இந்திய அரசு, இலங்கைத் தமிழர் பிரச் சினையில் மட்டும் மெத்தனப் போக்கு டன் ஏன் செயற்படுகிறது என்கிற கேள்வியைத் தமிழர்கள் கேட்பதில் நியாயம் இல்லாமல் இல்லை.

முன்பெல்லாம், நம்மவர்கள் மத்திய ஆட் சியில் முக்கிய பங்கு வகிக்காதபோது, நமக்கு அதனால்தான் மரியாதை இல்லையோ என்று நினைக்கத் தோன்றியது. கடந்த 18 ஆண்டுகளாக, மத்திய அரசின் அச்சாணி யாக தமிழகத்தின் மாநிலக் கட்சிகள் செயற் பட்டும் அதே நிலைமை நீடிப்பதுதான் ஆச்சரி யத்திலும் ஆச்சரியம்.

அதிகாரிகள் மட்டத்தில் பேசிப் பய னில்லை என்பதையும், பிரதமர் மன்மோகன் சிங்கே நேரடியாக இலங்கை அதிபருடன் பேசி, தமி ழர்களின் உயிருக்கும், உடமைக்கும், உரி மைக்கும் பாதுகாப்புத் தேடித் தர வேண்டும் என்று எதிர்கட்சிகள் தமிழகத்தில் எழுப்பு கின்ற குரல் டில்லியில் கேட்கிறதா என்பது தெரிய வில்லை.

ஆனால், முதல்வர் கருணாநிதியே பிரத மரிடம் பேசியிருப்பதாகச் சொல்கிறார். அது ஓரளவுக்குப் பிரதமரை யோசிக்க வைத்திருக் கும் என்று நம்பலாம். கவலை வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன். என்னை நம்புங் கள்" என்று பிரதமர் நா தழுதழுக்கத் தன் னிடம் கூறியிருப்பதாகவும், பிரதமரின் வார்த் தைகள் தனக்கு நம்பிக்கை தருவதாகவும் கூறுகிறார் முதல்வர்.

மத்திய அரசு இலங்கை தூதரக அதிகாரி மூலம் விடுவித்திருக்கும் எச்சரிக்கை மீறப்பட் டால் இந்த அரசு தேவைதானா என்ற கேள் விக்கு விடைகாண வேண்டிவரும். என்று முதல்வர் குறிப்பிட்டிருக்கிறார்.

அது மத்திய அரசுக்கு மட்டுமல்ல அவரது தலைமையி லான தமிழக அரசுக் கும் பொருந்தும் என்பது தான் உண்மை! என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


(அ-6)

## உள்ளூர் பொலிஸாரின் விசாரணையில் நம்பிக்கை இல்லை சர்வதேச பொலிஸார் வரவழைக்கப்பட வேண்டும்

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

அநுராதபுரத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பாக சர்வதேச பொலிஸாரே விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்தார்.



பாராளுமன்றத்தில், செவ்வாய்க்கிழமை விசேட அறிக்கையொன்றைச் சமர்ப்பித்து உரையாற்றிய ரணில் விக்ரமசிங்க அநுராத புரத்தில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் வடமத்திய மாகாணசபை எதிர்க்கட்சித் தலை வர் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா கொல் லப்பட்டிருப்பதைக் கண்டிப்பதாகவும் இந்தக் குண்டுத்தாக்குதல் தொடர்பாக சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பொலிஸாரே விசாரணை களை நடத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தார்.

உள்ளூர் பொலிஸாரின் விசாரணைகள் மீது தமக்கு நம்பிக்கையில்லையெனவும் சர்வதேசப் பொலிஸார் வரவழைக்கப்பட்டே விசாரணைகள் நடத்தப்படவேண்டு மென வும் அவர் குறிப்பிட்டார்.

30 வருடங்களுக்கு மேலாக இராணுவத் திலிருந்து சேவையாற்றிய ஜானக பெரேரா ஓய்வு பெற்ற பின்னரும் நாட்டு மக்களுக்கா கத் தொடர்ந்தும் சேவையாற்றியதாகச் சுட் டிக்காட்டிய ரணில் விக்ரமசிங்க அவருக்கு விடுதலைப்புலிகளிடமிருந்தும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளிடமிருந்தும் அச் சுறுத்தல் இருந்தமை குறித்து முறைப்பாடுகள் மேற் கொள்ளப்பட்டிருந்ததாகக் குறிப்பிட்டார்.

**பாதுகாப்புக் கோரி அநுராதபுரம் பொலிஸாருக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டிருந்தது**

அநுராதபுரத்தில் எதிர்க்கட்சி அலுவ லகத் திறப்பு விழாவிற்குப் பாதுகாப்பு வழங் குமாறு பொலிஸாருக்கு அழைப்பு விடுக்கப் பட வில்லையென ஆளும் தரப்பில் முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டை மறுத்துரைத்த எதிர்கட்சித் தலைவர் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி விழாவுக்குப் பாதுகாப்புக் கோரி அநுரா தபுரம் பொலிஸாருக்கு அனுப்பிவைத்த கடி தத்தைச் சபையில் சமர்ப்பித்தார்.

மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லையெனக் கூறி அவரின் பாதுகாப்பைக் குறைத்த பாது காப்பு அமைச்சரும் பாதுகாப்பு அமைச் சரின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுமே இந் தப் படுகொலைக்குப் பொறுப்புக் கூறவேண்டு மென ரணில் விக்ரமசிங்க தனது உரையில் குறிப்பிட்டார். (அ-6)

## ஈழத் தமிழர்களுக்காக புழல் சிறையில் உண்ணா நிலைப்போராட்டம்

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் தாக்கப்படு வதை கண்டித்து சென்னை மத்திய சிறை யான புழல் சிறையில் உண்ணா நிலைப் போராட்டம்நடத்தப்பட்டது. இஸ்லாமிய அமைப் பின் தலைவர் களில் ஒருவரான குணங்குடி அனீபா இந்திய தேசிய பாதுகாப்புச்சட்டத் தின் கீழ் பல ஆண்டுகளாக சிறையில் அடைக் கப் பட்டுள்ளார்.

ஈழத்தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் கண்மூடித்தனமான தாக்குதல்க ளைக் கண்டித்து செவ்வாய்க்கிழமை சிறைக் குள்ளேயே அவர் ஒரு நாள் உண்ணா நிலைப்போராட்டம் நடத்தினார். (அ-6)

## பிரிந்தவர்களை மீண்டும் கட்சியில் இணைக்க ஐ.தே.க தீர்மானம்

### அதிருப்தியாளர்களுடன் பேச ருக்மன் நியமனம்

(கொழும்பு)

தமது கட்சியிலிருந்து பிரிந்து அரசாங்கத்துடன் இணைந்துள்ளவர்களை மீண்டும் கட்சியில் இணைந்து கொள்ள அழைப்பது என ஐக்கிய தேசியக்கட்சி தீர்மா னித்துள்ளது.

இதற்கான தீர்மானத்தை கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் அர சியல் விவகாரக்குழுவிற்கு அறிவித்துள் ளார்.

இது தொடர்பாக அமைச்சர் கரு ஜெயசூரிய தலைமையிலான அதிருப்தியா ளர் குழுவுடன் பேசுவதற்கு கட்சியின் தலைவர் ருக்மன் சேனாநாயக்க நியமிக்கப்பட்டுள் ளார்.

அமைச்சர் கரு ஜெயசூரிய சுகவீனம் கார ணமாக சிகிச்சை பெற்றுவரும் வைத்தியசா லைக்கு கடந்த வாரம் சென்ற ரணில் விக் கிரமசிங்க தற்போதைய அரசியல் நில வரம் குறித்து கலந்துரையாடினார்.

இதன்போது அரசியல் அமைப்பின் 17ஆவது திருத்தச்சட்டத்தை அரசாங்கம் அமுல் செய்யாமை குறித்து கருஜெயசூரிய தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

17ஆவது அரசியல் அமைப்பு சீர் திருத்தம் கொண்டுவருவதற்கு கரு ஜெயசூரி யவே முன்னர் ஐக்கிய தேசியக்கட்சி யின் அரசாங்கத்தின் போது முன்னெடுப்புகளை மேற்கொண்டிருந்தார்.

இதேவேளை கட்சியின் முக்கிய உறுப்பி னர்களும் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தின் போது கட்சியிலிருந்து பிரிந்து சென்ற அரசாங்கத்தின் அமைச்சுப் பதவி களை ஏற்றுள்ளவர்கள் மீண்டும் கட்சிக்குத் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாக தெரிவித் துள்ளனர். (அ-6)

## கருணாவுக்கு எதிராக நம்பிக்கை இல்லா பிரேரணை நிறைவேற்றப்பட வேண்டும்

### சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை

(கொழும்பு)

போர்குற்றங்கள் மற்றும் மனித நேயத் திற்கு எதிராக செயற்பட்டார் என குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் கருணா என அழைக்கப் படும் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு எதி ராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கை இல்லாத தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத் துள்ளது.

ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்கவால் ஏற்படுத்தப்பட்ட வெற்றிடத்திற்கு ஐக்கிய மக்கள் சுதந் திரக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் பாராளு மன்ற உறுப்பினராக கருணா பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

பல சிறுவர்களை படையில் இணைத் தமை நூற்றுக்கணக்கானவர்களை கொன் றமை சித்திரவதைப்படுத்தியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களில் அவர் கடந்த காலங்களில் ஈடுபட்டதாக சர்வதேச மன்னிப் புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

கருணா சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படவேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆசியப் பிராந் திய பணிப்பாளர் சாம் சரிப்ஃபி தெரிவித் தார்.

போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர் என சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் நாடாளுமன் றத்திற்கு நுழைந்துள்ள நிலையில் அவ ருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் விசாரிக்கப் படவேண்டும் என கோரிக்கை விடுக்கின் றோம் என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித் துள்ளது.

அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்பட்டு கருணாவுக்கு எதிராக நம் பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேற்றப் படவேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை யின் ஆசியப் பிராந்தியப் பணிப்பாளர் சரிப்ஃபி கோரிக்கை விடுத்தார். (அ-6)

ஒருவனை தைரியப்படுத்துவதென்பது அவனுக்குச் செய்யும் உதவியில் மூன்றில் இரண்டு பங்காகும். — ஈரான்

வலம்புரி

## தமிழகத்தில் தாழமுக்கம் கொண்ட ஈழத்தமிழர் ஆதரவுப் புயல்

தமிழக முதல்வர் மு.கருணாநிதி அவர்கள் மௌனம் கலைத்து ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுத்ததும் தமிழகம் முழுவதும் எழுந்து நின்று ஈழத்தமிழரைக் காப்பாற்று என ஆர்ப்பரிப்பது கண்டு நொந்து போயுள்ள ஈழத்தமிழர் ஆறுதலடைகின்றனர்.

எது செய்தாலும் கேட்பார் இல்லை என்ற அநாதை நிலையை தமிழகம் முடிவுக்கு கொண்டு வந்து விட்டது.

இங்கு கருணாநிதியுடன் செல்வி ஜெயலலிதாவையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளரையும் ஈழத்தார் மறக்க மாட்டார்கள்.

ஈழத்தமிழர் தொடர்பில் கடும் போக்குடைய செல்வி ஜெயலலிதா அண்மையில் இலங்கையில் இடம்பெறும் கொடூர யுத்தம் தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார்.

அந்த அறிக்கையில் இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதற்கு இந்திய மத்திய அரசு தான் மௌன சாட்சி என்று கூறியிருந்தார்.

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது எனவும் செல்வி ஜெயலலிதா தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

அவரின் இந்த அறிக்கை மௌனமாக இருந்த கலைஞர் கருணாநிதிக்கு ஊக்கமருந்து கொடுத்தது போலாயிற்று. இதுவரை மௌனம் காத்த கலைஞர் ஈழத்தமிழரைக் காப்பாற்றுமாறு மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்தார்.

இலங்கை விவகாரத்தில் இந்திய மத்திய அரசை தலையிடுமாறு கோரி தமிழக மக்கள் தந்தியனுப்பும் போராட்டத்தை ஆரம்பிக்குமாறும் அவர் கேட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் ஈழத்தமிழருக்கான ஆதரவு அலை வீசத் தொடங்கியுள்ளது.

இந்திய மத்திய அரசின் உதவியுடனேயே இலங்கை அரசு யுத்தத்தை முன்னெடுக்கிறது எனும் குற்றச்சாட்டின் மத்தியில் தமிழகத்தில் எழுந்துள்ள ஈழத்தமிழர் ஆதரவுப் புயலை உடனடியாக சமாளிக்க வேண்டுமென்ற கட்டாயத்துக்கு பிரதமர் மன்மோகன் சிங் ஆளாகிவிட்டார்.

இந்தியாவை ஓரங்கட்டிவிட்டு இலங்கை எந்த நடவடிக்கையையும் செய்ய முடியாதென்பது நிறுத்திட்டமான உண்மை.

1983 கலவரத்தின் போது நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அநுரா பண்டாரநாயக்கா கூறிய கருத்தொன்று இங்கு நோக்குதற்குரியது.

இந்தியாவை நாம் அனுசரித்து செல்லாவிட்டால் –தமிழர்களை பாதுகாக்க தவறினால் ஒரு சிகரட்டை புகைத்து மறு சிகரட்டை பற்ற வைப்பதற்குள் இந்தியப் படைகள் இலங்கையில் நிற்கும் என்று கூறியிருந்தார்.

இந்தக் கருத்தை உணர வைப்பதாக தமிழகத்தில் தற்போது கொந்தளிப்பு ஆரம்பமாகியுள்ளது. எதனையும் பொறுத்திருந்து பார்க்கலாம்.

# தமிழகக் கட்சிகள் ஒரே குரலாக ஈழத்தமிழருக்காக குரல் கொடுக்கின்றமை ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும்

## மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் தெரிவிப்பு

(கொழும்பு)

1983 ஆம் ஆண்டு இலங்கையில் இனக்கலவரம் ஏற்பட்ட போது அனைத்துத் தமிழகக் கட்சிகளும் மக்களும் திரண்டெழுந்த வரலாற்றுச் சம்பவத்துக்குப் பின்பு தமிழகத்தின் ஆளும், எதிர்கட்சிகள் இலங்கை சிறுபான்மை தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க முனைந்திருக்கின்றமை இலங்கை இனப் பிரச்சினையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு மலையக மக்கள் முன்னணித் தலைவரும் சமூக அபிவிருத்தி மற்றும் சமூக அநீதி ஒழிப்பு அமைச்சருமான பெ.சந்திரசேகரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நான் கடந்த காலங்களில் மேற்கொண்டிருந்த தமிழக விஜயங்களின் போது அரசியல் தலைவர்களையும் இலங்கை தமிழர்களுக்காக குரல் கொடுக்கின்ற அனைத்து முக்கியஸ்தர்களையும் மக்களின் உணர்வுகளை தொடக்கூடிய கலைஞர்களையும் எழுத்தாளர்கள் சிந்தனையாளர்கள் முதலானோரையும் சந்தித்து தமிழக கட்சிகள் அணி திரள வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி வந்துள்ளேன் .அதற்கேற்ற காலம் தற்போது கனிந்துள்ளது.

தமிழகம் திரண்டெழுந்ததால் இந்திய டில்லி அரசு தலைகுனிய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அதுவே இலங்கைத் தமிழர்களுக்கு தலை நிமிர்வை உருவாக்கும். இலங்கை வாழ் வட, கிழக்கு தமிழர்களாக இருந்தாலும் மலையகத்தமிழ் மக்களாக இருந்தாலும் எவரும் சிங்கள மக்களை அடிமைப்படுத்த நினைத்தவர்கள் அல்ல. சிங்களத்தலைமைகளோடு சகோதரத்துவமாக கைகோர்த்திருந்த கடந்த கால வரலாறே இதுவரையிலும் பதியப்பட்டுள்ளது.

ஆனால் தமிழர்களின் உயர்வுக்கு தேசிய தலைவர்கள் எப்போது தடை போட ஆரம்பித்தார்களோ அப்போதிருந்தே முறுகல் நிலையும் போராட்டமும் தோன்ற ஆரம்பித்து விட்டன.

இந்த வரலாற்றுப் பின்னணியைக் கொண்டு இலங்கை இனப்பிரச்சினையை டில்லி மற்றும் இலங்கை அரசுகள் நிதானத்தோடு அவதானிக்க வேண்டும். மேலும் கடந்த காலங்களில் இலங்கை இனப் பிரச்சினையில் மௌனம் காத்து தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தற்போது உலகத்தமிழர்களின் கவனத்தை ஈர்க்கக்கூடிய அளவில் சில முடிவுகளை எடுத்திருப்பது மகிழ்ச்சிக்குரியதும் பாராட்டத்தக்கதுமாகும்.

அதேபோல எதிர்க்கட்சித்தலைவி செல்வி ஜெயலலிதாவும் இலங்கைத் தொடர்பில் இவ்வளவு வெளிப்படையாக எப்போதும் தமது கருத்தைதெரிவித்ததில்லை. ஆனால் தலைவர் எம்.ஜி.ஆரின் அரசியல் வாரிசு என்ற ரீதியில் அவர் எடுத்திருக்கும் பிரமிக்கத்தக்க முடிவு இலங்கைத் தமிழர்களுக்கெல்லாம் புத்தூக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய வரலாற்று மாற்றங்கள் இலங்கையின் இனப் பிரச்சினையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார். (அ-6)

# ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியாவை விமர்சிப்பது தேசத்துரோகமெனில் தொடர்ந்தும் அதை செய்வேன்

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் இடம்பெற்று வரும் போரை இந்திய அரசு தான் பின்நின்று நடத்துகிறது. என்று குற்றம் சுமத்துகிறேன். இப்படிப் பேசுவது, தேசத்துரோகம் என்றால் இந்த தேசதுரோகத்தை வைகோ தொடர்ந்து செய்வான் என்று மறு மலர்ச்சி தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

சென்னையில் பகத்சிங் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் ம.தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர் வழக்கறிஞர் கே. எஸ். இராதாகிருஷ்ணன் எழுதிய ***கனவாகிப்போன கச்சதீவு***நூல் வெளியீட்டு நிகழ்வு செவ்வாக்கிழமை நடை பெற்றது.

நிகழ்வுக்கு தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் தலைமை தாங்கினார்.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கலந்துகொண்டு நூலை வெளியிட முதல் பிரதியை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் ஆர். நல்லகண்ணு பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் வைகோ பேசியதாவது, மாவீரன் பகத் சிங்கின் வீரத்தை வன்னிக்காட்டில் பார்க்கின்றேன். பகத்சிங்கை தம்பி பிரபாகரனின் வடிவத்தில் பார்க்கிறேன்.

விடுதலைப்புலிகள் தமிழ் இனத்தை மீட்க போர்க்களத்தில் நிற்கிறார்கள் அவர்களின் ஆயுதப் போராட்டம் உடன்பாடு இல்லாமல் இருக்கலாம் இலங்கை இராணுவத்திற்கு இந்திய அரசு இராணுவ உதவிகளை செய்து வருகிறது. அந்த இராணுவங்களைக்கொண்டு இலுங்கை அரசு அங்குள்ள தமிழர்களை கொன்று குவித்துவருகிறது.

இதற்கு மத்திய அரசு பொறுப்பேற்க வேண்டும் இலங்கையில் இடம்பெற்று வரும் போரை இந்திய அரசு தான் பின்னின்று நடத்துகிறது என்று குற்றம் சுமத்துகிறேன் இப்படி பேசுவது தேசத்துரோகம் என்றால் இந்த தேசத்துரோகத்தை வைகோ தொடர்ந்து செய்வான்.



இலங்கை இராணுவம் தமிழர்களை கொன்று குவிப்பது மட்டும் தேசபக்தியா? இந்திய அரசு உடனடியாக இராணுவ உதவிகளை உடனடியாக நிறுத்தவேண்டும்.

இந்தியாவும் இலங்கையும் தகவல் தொழில்நுட்ப ஒப்பந்தம் போட்டுள்ளன என்பது இன்னும் வெளியே தெரியாத செய்தி இந்த ஒப்பந்தம் 2013ஆம் ஆண்டுவரை நடைமுறையில் இருக்கப்போகின்றது.


தமிழர்கள் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிச் சுடுவதை கண்டித்தும் இலங்கைத் தமிழர்கள் மீது சிங்கள இராணுவம் நடத்தி வரும் தாக்குதல்களை மத்திய அரசு தடுக்கக்கோரியும் வருகிற 10ஆம் திகதி தமிழ் நாட்டில் உள்ள அனைத்து மத்திய அரசு அலுவலகங்கள் முன்பு மறியல் போராட்டம் நடத்துவோம் என்றார் அவர். (அ-6)

# முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்-பகவான்.பாபா

நாம் உலக கருமங்களில் ஈடுபடும் போது உள்ளத் தூய்மையுடன் ஈடுபாடு கொள்ளல் வேண்டும். வாழ்வில் நடைபெறும் பிரதானமான கரும செயற்பாடுகள் இறைவனை மையமாக வைத்தே நடைபெறுகின்றன. காரணம் எங்களை வழி நடத்துபவன் இறைவனே. எல்லா உயிரினத்தையும் அவனே, படைத்து; காத்து; அழிக்கின்றான். இறைவன் ஒருவனே. எனவே நாம் மதம் மாற வேண்டியதில்லை என்கிறார் பகவான் பாபா. தான் வெட்டிய கிணற்றை ஆழமாக வெட்டித் தண்ணீர் காணாமல் பல கிணறுகளை வெட்டிப் பிரயோசனமில்லை.

பகவான் அருளுகிறார், "பிறர் பொருளை கவர்தல், பிறர் வருந்தும்படி எமது நடத்தையிருத்தல்; முதியவர்களை அவமதித்தல் பொதுவாக பிறர் கண்ணீருக்கு ஆளாகல் என்பன தவிர்க்கப்படல் வேண்டும். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பது போல, வீதியால் செல்லும் பெண் பிள்ளையோடு நீ சேஷ்டை செய்தால் நாளை உனது தாய், சகோதரிக்கும் அச் சம்பவம் நேரிடலாம்." மனித வாழ்வில் இரு தர்மங்கள் உண்டு. ஒன்று சனாதன தர்மம், மற்றையது ஆச்சார தர்மம். சனாதன தர்மமானது மனிதன் நிலையற்றவற்றைத் தவிர்த்து நித்தியத்தை நாடிச் செல்லலாகும். ஆச்சார தர்மமொன்பது மனித வாழ்வில் பிறர் பழிப்பில்லா வாழ் நெறி தர்மத்தை கடைப்பிடித்தல். இதுவே முதல் தர்மமாகும். வாழ் நெறியில் நற்சீலர்களாக வாழ்ந்து இல்லறத்தில் நல்லறமியற்றி பின் சனாதன தர்மமான நித்தியத்தை தேடி தருமம் செய்தல் வேண்டும்.

ஒரு முறை புத்த பெருமான் தனது சீடர்களுடன் தொலைதூரமமொன்றிற்கு யாத்திரை மேற்கொண்டார். அப்போது பல கிராமங்களையும் காடு புதர்களையும் கடந்த செல்கையில் அவ்விடமக்கள் பெருமானையும் சீடர்களையும் பரிசகசித்து கெட்ட வார்த் தைகளால் திட்டினார்கள். இதனை சீடர்கள் பெருமானிடம் தெரிவிக்க அவரோ அதனை ஏற்க வேண்டாம் என்றார். சீடர்களுக்கு புரியவில்லை. அடுத்த கிரமா மக்கள் இவர்களுக்கு இனிப்பு கொடுத்த வரவேற்றனர். அதனையும் ஏற்கவேண்டாம் என பெருமான் கூறினர். எனவே அவ் மக்களே அவற்றை சுவைத்தனர். இதனைப் பார்த்த பெருமான் தன் சீடர்களிடம் நாம் எதனையும் பிறரிடமிருந்து பெறாது விட்டால் அதை அவர்களே சுவைப்பார்கள். ஆகவே நாம் அவர்கள் திட்டியதையும் ஏற்கவில்லை. இனிப்புக்களையும் வாங்கவில்லை



மனிதன் + ஆசை = மிருகம்

மனிதன் – ஆசை = கடவுள்

ஜெய்சாயிராம்

யாதவன்

# உலகளாவிய ரீதியில் மக்களை ஒன்றிணைத்த அஞ்சல் சேவை

## ஒக்டோபர் 9 சர்வதேச அஞ்சல் தினம்

சர்வதேச ரீதியில் தரமான அஞ்சற் சேவையினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு ''சர்வதேச அஞ்சல் ஒன்றியம்'' அமைக்கப்பட்டது. சர்வதேச ரீதியில் இயங்கும் பழமை வாய்ந்த இவ் ஒன்றியம் சர்வதேசங்களின் ஒத்துழைப்பின் பலனாகவே இன்றும் தனது நோக்கை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றது. இதன் எண்ணக் கரு 1863 இல் ஐக்கிய அமெரிக்காவில் அஞ்சல் அதிபர் நாயகமாகவும் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனின் மந்திரி சபையின் உறுப்பினராகவும் விளங்கிய மொன்கெமேரி பிளேயரின் எண்ணத்தில் உதித்ததன் பலனாக, பாரிஸ் நகரில் கூட்டப்பட மாநாட்டில் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த பதினைந்து பிரதிநிதிகள் சந்தித்து, பரஸ்பர நம்பிக்கையுடன் கூடிய பொதுவான அமைப்பினை ஏற்படுத்துவதற்கு இணக்கங்கண்டார்.

இதன் பின் ஏறத்தாழ பதினொரு ஆண்டுகள் கடந்த பின் ஜேர்மன் நாட்டின் அஞ்சல் பணிப்பாளர் நாயகத்தின் பெருமுயற்சியினால் 1871 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஒன்பதாம் திகதி சுவிற்சர்லாந்து நாட்டின் பேர்ன் நகரில் கூட்டப்பட்ட மாநாட்டில், இருபத்திரண்டு நாடுகளின் பிரதிநிதிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு ''அஞ்சல் பொது ஒன்றியம்'' உருவாக்கப்பட்டது. இப் பெயரானது 1878 இல் நடைபெற்ற இரண்டாவது மாநாட்டில் ''சர்வதேச அஞ்சல் ஒன்றியம்'' (Universal Postal Union) எனப் பெயர் மாற்றம்பெற்றது.

ஒன்றியம் அமைக்கப்பட்டதற்கான நோக்கத்திற்கு இணங்க, உறுப்பு நாடுகள் அனைத்தும் அஞ்சல் பொருட்களை பரஸ்பர நம்பிக்கையுடன் கையாளுவதன் பொருட்டு சர்வதேசங்களும் ஒரு அஞ்சல் வலயமாகக் கருதப்பட்டு நிர்ணயிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இத் தத்துவமானது உலகளாவிய ரீதியில் சுதந்திரமான அஞ்சல் போக்குவரத்துக்கு வழி சமைப்பதுடன், ஒரு அஞ்சல் நிர்வாகத்தினால் இன்னொரு அஞ்சல் நிர்வாகத்திற்கு அனுப்பப்படும் அஞ்சற்பொருட்கள் இடைநிலை அஞ்சல் நிர்வாகத்தினால் பொறுப்புடன் கையாளப்படுகின்றமையினை உறுதிப்படுத்துகின்றது.

சேவையினை இயக்குவதற்குத் தேவையான மற்றைய அடிப்படைத் தத்துவமானது அஞ்சற் பொருட்களின் நியம நிறை விகிதத்திற்கேற்ப அஞ்சற் கட்டணத்தினை நிர்ணயம் செய்தல் என்பதாகும்.


1875 தொடக்கம் 1971 வரையான காலப் பகுதியில் அஞ்சற் பொருட்களை அனுப்பும் மூல நிர்வாகங்களே பெறப்படும் கட்டணங்களைத் தமக்குரியதாக்கிக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் விநியோகத்தினை மேற்கொள்ளும் அஞ்சல் நிர்வாகத்துக்கு வேதனம் எதுவும் கிடைப்பதில்லை. ஆயினும் 1969 இல் டோக்கியோ நாட்டில் இடம்பெற்ற மாநாட்டுத் தீர்மானம் தற்போது நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

அதாவது, குறிப்பிட்ட ஒரு அஞ்சல் நிர்வாகம்(நாடு) இன்னொரு அஞ்சல் நிர்வாகத்திற்கு (வேறொரு நாட்டிற்கு) அனுப்பும் அஞ்சற் பொருட்களின் நிறைக்கும், அந் நாட்டிலிருந்து முதற் குறிப்பிட்ட நாட்டிற்கு அனுப்பப்படும் அஞ்சற் பொருட்களின் நிறைக்கும் உள்ள வித்தியாசம் கணக்கிடப்பட்டு கூடுதலான அஞ்சற் பொருட்களை அனுப்பிய நாடு,மற்றைய நாட்டிற்கு ஒன்றியத்தினால் குறித்துரைக்கப்பட்ட நியதிகளுக்கு இணங்க கொடுப்பனவுத் தொகையினை வழங்குதல் வேண்டும். இந் நடைமுறையானது எதிர்காலத்தில் மாற்றமடைவதற்கான சாத்தியப்பாடு உள்ளது.

அஞ்சற் பொருட்கள் என்ற பதம் அஞ்சல் அட்டைகள், வான் கடிதங்கள், அச்சடித்த விடயங்கள், கண்பார்வை அற்றோருக்கான இலக்கியம், சிறிய பைக்கற்றுக்கள் என்பவற்றை உள்ளடக்கியதாகும். ஒன்றியத்தின் அமைப்பு விதி இப் பொருட்களின் கட்டண வீதம், அதியுயர், அதி குறைந்த நிறை, பருமன் அத்துடன் பதிவுக் கடித சேவை, காப்புறுதிக் கடித சேவை, விமான மூலமான அஞ்சற் சேவை,விஷேட பாதுகாப்புடன் அனுப்ப வேண்டிய பொருட்கள் சம்பந்தமாகவும் விதி முறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

பொதுச்சபை, நிறைவேற்றுச் சபை, அஞ்சற் கல்விக்கான ஆலோசனை சபை, சாவதேச பணியகம் ஆகியன ஒன்றியத்தின் முக்கிய பகுதிகளாகும். ஒன்றியத்தின் ஆரம்பத்தில் இருந்து மத்திய அலுவலகம் ''சர்வதேசப் பணியகம்'' என்ற பெயரில் பேர்ன் நகரில் இயங்கிவருகின்றது. சர்வதேச அஞ்சல் ஒன்றியம், சர்வதேச அஞ்சற் சேவை தொடர்பான ஒருங்கிணைப்பு வெளியீடுகள், பிரசாரம் என்பன இதன் முக்கிய பணிகளாகும்.

அஞ்சல் முத்திரைகளை வெளியிடுதல், விற்பனை செய்தல் உறுப்பு நாடுகளின் சொந்த விவகாரமாகும். அதனால் தான் முன்பு முத்திரை வெளியிடுதல் ஒன்றியத்துடன் தொடர்பற்ற விடயமாக இருந்தபோதும் உறுப்பு நாடுகளின் நலனில் ஒன்றியம் அக்கறையுடன் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.



எப்படியோ. அண்மைக் காலத்தில் இக் கொள்கையில் முத்திரைகள் ஒரு நாட்டின் கலாசாரம், சரித்திரம். கலை வளர்ச்சி என்பவற்றினைப் பிரதிபலிப்பதுடன் வரியினை ஈட்டிக்கொள்வதற்கும் பயன்படுத்தப்படும் காரணமாக சிறிய மாற்றம் தென்படத் தொடங்கியது. அண்மைக் காலத்தில் ஒன்றியம் முத்திரை வெளியீடு தொடர்பாகப் பின் வரும் விடயங்களைப் பொறுப்பேற்றுள்ளது.

- **முத்திரைகள் தொடர்பான ஆய்வு**
- **அஞ்சல் நிர்வாகங்களின் வேண்டுதலின் பேரில் நிபுணத்துவ சேவை வழங்கல்.**
- **சர்வதேச ரீதியான கருத்தரங்குகள் ஒழுங்கு செய்தல்.**
- **சர்வதேச ரீதியான முத்திரைக் கண்காட் சிகளை ஏற்பாடு செய்தல்.**

ஒன்றியமானது ஐ.நா. சபையுடன் 1947 இல் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்திற்கு இணங்க 01.07.1948 தொடக்கம் ஐ.நா.வின் விசேட அந்தஸ்துடன் கூடிய உறுப்பினர் வரிசையில் உள்ளது.

சர்வதேச அஞ்சல் வலையமைப்பு மூலம் பின் தங்கிய கிராமங்கள் கூட அஞ்சற் சேவையினைப் பெறக் கூடியதாக உள்ளது. தற்போது உலகில் ஏறத்தாழ 6 இலட்சத்து 70 ஆயிரம் நிரந்தர அஞ்சல் அலுவலகங்கள் இயங்குகின்றன. இவற்றில் ஆறு மில்லியன் பேர் வரையில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். அத்துடன் சர்வதேச ரீதியில் 430000 மில்லியன் அஞ்சற் பொருட்கள் வருடந்தோறும் பரிமாற்றப்படுகின்றன. இவ் அஞ்சல் அலுவலகங்கள் அஞ்சற் சேவையுடன் காசுக்கட்டளை, அஞ்சற் காசோலை, சேமிப்பு வங்கிக் கணக்கு போன்ற சேவைகளையும் தேசிய, சர்வதேச ரீதியில் மேற் கொண்டுள்ளன.

இருபத்திரண்டு நாடுகளின் உறுப்புரிமையுடன் ஆரம்பிக்கப்பட்ட ஒன்றியமானது இன்று 192 நாடுகளின் உறுப்புரிமையினைக் கொண்டுள்ளது. இலங்கை குடியேற்ற ஆட்சி முறையின் கீழ் 01.04.1877 இலும் பின்னர் 13.07.1949இல் சுதந்திர நாடாகவும் ஒன்றியத்தில் இணைந்துள்ளது.

### உலக அஞ்சல் தினப் பிரகடனம்


''உலகின் பல்வேறு நாடுகளுக்குரிய புவியியல். அரசியல், மதம் போன்ற பல்வேறு எல்லை மற்றும் தடைகளைத் தாண்டி எமது மக்களை முழு உலகுக்கும் இணைக்கின்றோம்.

மக்கள் அவர்களுக்கேயுரிய பிரத்தியேகமானதும் மிகப் பெறுமதி வாய்ந்ததுமான தகவல்களையும் பொருட்களையும் எம்மிடம் ஒப்படைப்பது அவற்றைப் பாதுகாத்து மிக வேகமாகவும்,மிகக் கவனத்துடனும் அதன் உரிமையாளர் களுக்கு ஒப்படைப்பார்கள் என்ற எம் மீதுள்ள பெரு நம்பிக்கை என்பதை நாம் அறிந்துள்ளதோடு அவர்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை உயர் செயற்திறமையுடனும், நேர்மையுடனும்,பாதுகாப்புடனும் இரகசியத் தன்மையைப் பேணி அவர்களுடைய தகவல்களையும்,பொருட்களையும் உரிமையாளர்களுக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், நேற்றைய தினத்தை விட நன்றாக இன்றைய தினத்திலும், இன்றைய தினத்தை விட நன்றாக நாளைய தினத்திலும்,திறமையான சேவையை மக்களுக்கு வழங்குவதற்கு அர்ப்பணத்துடன் செயற்படுவதாக''

**அம்பலவாணர் துரைசிங்கம்**
பிரதேச அஞ்சல் அத்தியட்சகர்
வவுனியா

புராதன காலத்தில் அரசர்களிடையே தூதுவர் மூலம் செய்திப் பரிமாற்றங்கள் இடம் பெற்றதாக கூறப்பட்ட போதும் போர்த்துக்கேயர் ஆட்சியில் (1517-1640), ஒல்லாந்தர் ஆட்சியில் (1640-1794) ஆங்கிலேயர் ஆட்சியின்போதும் 1815 வரை அஞ்சற் சேவை நடைபெற்றதற்கான பதிவுக் குறிப்புகள் கிடைக்கக் கூடியதாக இல்லை. 1815இல் முதன் முதலாக ஆறு அஞ்சல் அலுவலகங்கள் கொழும்பு, காலி, மாத்தறை, மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் ஆரம்பிக்கப்பட்டன. 22.08.1872 இல் முதன் முதலில் அஞ்சலட்டை அறிமுகமானது. 01.02.1893 இல் முதலாவது அஞ்சல் முத்திரை இலங்கை நாணயத்தில் வெளியிடப்பட்டது.

# ஜப்பான் குளிர்பானக் கடையில் பரிமாறும் ஊழியர்களாக பணியாற்றும் குரங்குகள்



ஜப்பானிய குளிர்பான கடை ஒன்றில் இரு குரங்குகள், வாடிக்கையாளர்களுக்கு மிகவும் லாவகமாக குளிர்பானங்களைப் பரிமாறி பார்ப்பவர்களை அசத்தி வருகின்றன.

யட்-சான் மற்றும் புகு-சான் ஆகிய இந்த இருகுரங்குகளுக்கும் ஜப்பானிய தலைநகர் டோக்கியோவின் வடக்கே உள்ள உட்சுனோமியா நகரில் அமைந்துள்ள தயபுகியா குளிர்பான கடையிலேயே இவ்வாறு குளிர்பானம் பரிமாறும் பணியில் ஈடுபட்டுள்ளன. மேற்படி குரங்குகளில் வயதில் குறைந்த குரங்கான புகு-சான்,வாடிக்கையாளர்கள் குளிர்பானத்தை வரவழைக்க அழைப்பு விடுக்கும் முன் ஜப்பானிய வழக்கப்படி அவர்களது கரங்களை வெதுவெதுப்பான துவாயால் சுத்தம் செய்ய உதவுகிறது. அடுத்து 12 வயதான யட்-சான் என்ற குரங்கானது வாடிக்கையாளர்களின் குளிர்பானங்களுக்கான கோரிக்கைகளை செவிமடுத்து உடனுக்குடன் அவர்களது தேவைகளை நிறைவேற்றும் பணியில் ஈடுபடுகிறது.

இந்தக்குரங்குகள், குளிர்பானம் பரிமாறும் ஊழி யர்களுடன் ஒப்பிடுகையில்,தமது பணியை மிகவும் சிறப்பாகச் செய்கின்றன என உணவக உரிமையாளரான 63 வயது கயோரு ஒட்ஸுகா தெரிவித்தார். அவர் ஆரம்பத்தில் இக்குரங்குகளை செல்லப்பிராணியாகவே வளர்க்க ஆரம்பித்தார். காலப்போக்கில் அவற்றின் மதிநுட்ப செயற்பாடுகளை அவதானித்து அவற்றுக்கு வாடிக்கையாளர் களுடன் எவ்வாறு பழகுவது, அவர்களின் தேவையறிந்து எவ்வாறு குளிர்பானங்களைப் பரிமாறுவது என்பன தொடர்பில் பயிற்சியளித்ததாக அவர் கூறினார். (அ-6)

# அமெரிக்காவில் ஒபாமாவுக்கான ஆதரவு அதிகரித்து வருகிறது

## பிந்திய கருத்துக்கணிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பராக் ஒபாமா, பிந்திய கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றில் அவரது போட்டியாளரான குடியரசு கட்சி வேட்பாளர் ஜோன்மக்கெயினை விட 8 புள்ளிகளால் முன்னணியிலுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

'' சி.என்.என்'' மற்றும் ''ஒப்பீனியன் றிஸேர்ச் கோர்பரேஷன்'' என்பன கூட்டிணைந்து நடத்திய இந்த தேசிய ரீதியான வாக்கெடுப்பின் பெறுபேறுகள் திங்கட்கிழமை மாலை வெளியிடப்பட்டன.



இதற்கு முன் மேற்படி நிறுவனங்களால் நடத்தப்பட்ட வாக்கெடுப்புடன் ஒப்பிடும் போது இரு மடங்கு புள்ளிகளால் ஒபாமா முன்னணியிலுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-6)

# பார்ப்போர் மனதை நெக்குருக வைத்த முன்பள்ளி ஆசிரியர் கௌரவிப்பு

சர்வதேச ஆசிரியர் தினத்தையொட்டி யாழ் மாவட்டம் முழுவதிலும் , ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டது. இதில் யாழ்ப்பாணக் கல்வி வலயம் தனது ஆசிரியர்களை கோட்ட ரீதியாகக் கௌரவித்துப் பாராட்டியது.



யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்களின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம்,நல்லூர் ,கோப்பாய் ஆகிய கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப் பட்டனர்.

இந் நிகழ்வு ஆசிரியர்களுக்கான மதிப்பை-கௌரவத்தை பன்மடங்கு உயர்த்தியதென லாம்.

கல்வித் திணைக்களம் என்றால் ஆசிரியர்களை அதட்டி ,வெருட்டி , வேலை வேண்டுவது என்ற காலகாலமாக கடைப்பிடிக்கப் பட்டு வந்த சித்தாந்தத்தை மாற்றி ஆசிரியர்களைப் பாராட்டி அவர்களை அன்புக்கரம் நீட்டி நெகிழ்ந்த முகாமைத்துவத்தினூடாக அவர்களின் முழுமையானதும், திறமையானதுமான பணியை பெற்றுக் கொள்வதே சாலச் சிறந்ததென்னும் புதிய சித்தாந்தத்தை அறிமுகப்படுத்தி-அமுலாக்கி வெற்றி கண்ட பெருமை யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதிஅ.வேதநாயகம்அவர்களையேசாரும்.

ஆசிரியர்களைக் கௌரவித்தல் என்பதற்கப்பால் யாழ்ப்பாணக் கல்விவலயத்திற்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களையும் சர்வதேச ஆசிரியர் தினத்தில் கௌரவித்தமை கல்விப்புலத்தில் ஓர் முக்கிய நிகழ்வெனலாம்.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் முன்பள்ளி ஆசிரியர் கௌரவிப்பு கடந்த 05.10.2008 அன்று யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்றது.

சுமார் 350 முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்ட இந் நிகழ்விற்கு யாழ். இந்துக் கல்லூரியின் அதிபர் வீ.கணேசராசா தலைமை தாங்கினார்.

பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகமும் ,சிறப்பு விருந்தினராக வேல்ட் விஷன் உத்தியோகத்தர் வசந்தநாயகமும் கலந்து கொண்டனர்.

முன்பள்ளி வளவாளர் விமலநாதன், முன்பள்ளி இணைப்பாளர் ஆகியோர் நிகழ்வின் ஒழுங்குபடுத்தலை செம்மைப்படுத்தியிருந்தனர்.

### கௌரவிப்பு

முன்பள்ளி ஆசிரியர்களை கௌரவித்து விருந்தினர்கள் உரையாற்றிய பின்னர் முன்பள்ளி ஆசிரியர்களை யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்கள் பதக்கம் அணிவித்துக் கௌரவித்தார்.

அந்தக் கௌரவிப்பு நிகழ்வு பார்ப்போர் மனதை நெக்குருக வைத்தது.

ஒவ்வொரு முன்பள்ளி ஆசிரியர்களும் கல்விப் பணிப்பாளரை வணங்கி பதக்கத்தை பெற்றுக் கொண்டனர். அவர்களின் மனப்பூரிப்பு ஆனந்தக் கண்ணீராகச் சொரிந்தது.

அந்த ஆனந்தக்கண்ணீருக்குள் யாழ்ப்பாண சமூகம் முன்பள்ளி ஆசிரியர்களை இதுவரை கவனிக்காத -கருத்தில் எடுக்காத சோகம் கரைந்து போனது எனலாம்.

### விட்ட குறை நிவர்த்தியானது

உலக நாடுகளிலெங்கும் முன்பள்ளி ஆசிரியர்களே முதன்மைப்படுத்தப்படுகின்றனர். ஒரு பிள்ளை தனது பள்ளி வாழ்க்கையை தனது முன்பள்ளி ஆசிரியர்களிடமே ஆரம்பிக்கின்றது.

இருந்தும் துரதிர்ஷ்டவசமாக இலங்கையில்-யாழ்ப்பாணத்தில் முன்பள்ளி ஆசிரியர்களின் வேதனமும் அவர்களுக்கான உரிய இடமும் இதுவரை வழங்கப்படவில்லை என்றே கூறவேண்டும்.


நீண்ட காலமாக நீடித்து வந்த இந்த மாபெரும் குறையின் ஒரு பகுதி யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிமனையினால் நீக்கப் பட்டு விட்டது.

முன்பள்ளி ஆசிரியர்களையும் கௌரவிக்க வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையை வெற்றிகரமாக நிறைவேற்றிய யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகத்தின் தூய சிந்தனை முன்பள்ளி ஆசிரியர்கள் தொடர்பில் புதியதோர் அத்தியாயத்தை யாழ்ப்பாண மண்ணில் ஏற்படுத்தி விட்டது.

### உரிமை கோரும் படலம்

புலமைப்பரீட்சையில் சித்தி, க.பொ.த சாதாரணதரத்தில் 10 ஏ,உயர்தரத்தில் 3 ஏ என்றபட்டோலை வரிசையில் இடம் பெறும் உரிமை கோரல்களும், பாராட்டுக்களும் நிகழ்ச்சி நிரலில் இடம் பெறும் போது இத்தனைக்கும், அத்திபாரமாக இருந்த முன்பள்ளி ஆசிரியர்கள் மறக்கப்பட்டமை -மறைக்கப்பட்டமை உயர் பண்பாட்டு விழுமியத்தின் சொந்தக்காரர்கள் என மார்தட்டும் எம்மை தலை குனியவே வைத்தது.





இந்தப் பெரும் தவறை நீக்கி மாணவர்களின் ஒவ்வொரு சாதனையின் அடித்தளத்திலும் முன்பள்ளி ஆசிரியர்களே திரவியப் பொருளாக இருந்தனர் என்ற உண்மையை முன்பள்ளி ஆசிரியர் கௌரவிப்பு உணர்த்தியது.

ஐம்பது வயதைக்கடந்த முன்பள்ளி ஆசிரியர்களும் வலயக் கல்விப் பணிப்பாளரை ஆரத்தழுவிய காட்சி இன்றுதான் எங்கள் மனம் பூரிப்படைகின்றது என்ற செய்தியை எடுத்துரைப்பதுபோல அமைய, மேடையில் இருந்தவர்களின் கண்களும் கலங்கவே செய்தன.

யாழ்ப்பாண இந்துக் கல்லூரி அதிபர் வீ. கணேசராசா பதக்கங்களை எடுத்துக் கொடுக்க வலயக்கல்விப் பணிப்பாளர் அவற்றை முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அணிய அவர்கள் ஒவ்வொருவரும் பணிப்பாளரை வணங்கி கௌரவிப்பை ஏற்றுக் கொண்ட பாங்கு பார்ப்போர் மனதை நெக்குருக வைத்தது.

-என்.விஜயன்

## யாழ்.கௌரவிப்பு விழா புதியதொரு அத்தியாயம்

# இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

(பெங்களூர்)

இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது டெஸ்ட் இன்று பெங்களூரில் ஆரம்பமாகிறது.

இரு அணிகளும் சம பலம் பொருந்தியவை என்பதால் டெஸ்ட் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலிய அணி கடைசியாக 2004- 05 ஆண்டில் இந்தியா வந்தபோது 2-1 (4போட்டி) என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது.

அவுஸ்திரேலிய அணியில் பொன்டிங், ஹைடன், மைக்கெல் ஹசி, மைக்கெல் கிளார்க், ஹடிச் போன்ற சிறந்த துடுப்பாட்ட வீரர்களும் பிரெட் லீ, ஸ்ருவெட் கிளார்க், ஜோன்சன் போன்ற சிறந்த பந்துவீச்சாளர்களும் வோட்சன் போன்ற சிறந்த சகல துறை வீரர்களும் உள்ளனர்.

சுழற்பந்துவீச்சில் அந்த அணி பலவீனமாக உள்ளது. இந்திய அணி சமீபத்தில் இலங்கையிடம் டெஸ்ட் தொடரை இழந்தது.

இந்தத் தொடரில் மூத்த வீரர்களான டெண்டுல்கர், கங்குலி, ராவிட் ஆகியோரது துடுப்பாட்டம் மிகவும் மோசமாக இருந்தது.

லக்ஸ்மனின் துடுப்பாட்டம் ஓரளவு சிறப்பாக அமைந்தது.

இதனால் இந்த டெஸ்ட் தொடர் மூத்த வீரர்களுக்கு கடும் நெருக்கடியாக இருக்கும். திறமையை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் அவர்கள் உள்ளனர்.

உள்ளூர் மைதானத்தில் ஆடுவதும், சுழற்பந்துவீச்சும் இந்தியாவுக்கு கூடுதல் பலமாக உள்ளது.மேலும் தோனி அணிக்கு திரும்பியதும் பலமே.

பந்துவீச்சில் ஹர்பஜன் சிங், சகீர்கான், இஷாந்த் சர்மா, கும்ளே ஆகியோர் முக்கிய பங்கு வகிப்பார்கள்.

சேவாக்கும், காம்பீரும் ஆரம்ப வீரர்களாக களம் இறங்குவார்கள். இரண்டு வேகப் பந்துவீச்சாளர்கள், மூன்று சுழற்பந்துவீச்சாளர்கள் இடம்பெற்றால் 11 பேர் கொண்ட அணியில் கங்குலிக்கு வாய்ப்புக் கிடைக்காது.

மேலும் சென்னையில் நடந்த பயிற்சி ஆட்டத்திலும் அவர் முத்திரை பதிக்கவில்லை. எனினும் இந்தத் தொடருடன் கங்குலி ஓய்வு பெறவுள்ளதால் அவருக்கு அணியில் வாய்ப்பு அளிக்கப்படலாம் என கூறப்படுகிறது.

கடந்த முறை தொடரை இழந்ததுக்கு இந்த முறை இந்திய அணி பதிலடி கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### இந்தியா

கும்ளே(அணித்தலைவர்), சேவாக், காம்பீர்,ராவிட்,டெண்டுல்கர், கங்குலி, லக்ஸ்மன், தோனி,ஹர்பஜன்சிங்,சகீர்கான்,




இஷாந்த் சர்மா, முனாப்பட்டேல்,பத்ரிநாத், ஆர்.பி.சிங் , அமித் மிஸ்ரா.

### அவுஸ்திரேலியா

பொன்டிங் (அணித்தலைவர்),ஹைடன், மைக்கெல் ஹசி,மைக்கெல் கிளார்க், ஹடிச், ஜேக்ஸ்,போலிங்கர்,ஹடின்,பிரெட் லீ, ஸ்ருவெட் கிளார்க், ஜோன்சன், ஜேசன், வோட்சன், கமரூன் ஒயிட்,பீற்றர் சிடில். (5)

# இடம்பெயர்ந்த மக்களை நேரில் சென்று சந்தித்தார் பிரபாகரன்

## விடுதலைப்புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

படையினரின் தாக்குதல்களால் இடம்பெயர்ந்து அவலப்படும் மக்களை வே.பிரபாகரன் நேரில் சந்தித்து அவர்களுக்கான உதவிகளை வழங்கும் பணிப்புரை வழங்கினார் என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

படையினரின் தாக்குதல்களால் பெருமளவில் மக்கள் இடம்பெயர்ந்து அவலப்படும் சூழ்நிலை காணப்படுகின்றது. அந்த மக்களின் அவலங்களைத் தலைவர் நேரில் பார்வையிட்டு அவர்களுக்குரிய உதவிகளை வழங்குமாறு போராளிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

மேலும் அவலப்படும் மக்களுக்குத் தமிழீழ அரசியல்துறை மற்றும் தமிழீழ கட்டமைப்புக்கள் உதவி செய்யும் நடவடிக்கைகளை துரிதமாக்கியுள்ளன.

இருப்பிடங்களை அமைப்பது, இதற்கான இடங்களைத் தெரிவு செய்து வழங்குவது என பல்வேறு பணிகள் துரிதமாகத் தமிழீழக் கட்டமைப்புக்களால் வழங்கப்படுகின்றன.

மக்களின் நலப்பணிகள் மற்றும் ஊட்ட உணவளித்தல் பணிகளும் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன எனப் புலிகளின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் காணி கொடுக்கல் வாங்கல் ரத்து

## உயர் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பத்தரமுல்லைப் பகுதியில் மேற்கொண்ட காணி கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையினை ரத்துச் செய்யுமாறு உத்தரவிட்டுள்ள உயர் நீதிமன்றம், 3 மில்லியன் ரூபாயின்னை அவர் அரசாங்கத்துக்கு அபராதமாகச் செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பளித்துள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்களான சிராணி திலகவர்த்தன, ரி.ஏ.ரட்ணாயக்க ஆகியோரைக் கொண்ட குழுவே இந்த உத்தரவினை விடுத்துள்ளது.

பத்தரமுல்லையில் 225 பேர்ச் காணி கொடுக்கல் வாங்கலுக்கு எதிராக ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களான சுகபால மெண்டிஸ், ராஜா சேனநாயக்க ஆகிய இருவரும் தாக்கல் செய்திருந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனு மீதான விசாரணையின் போதே உயர் நீதிமன்றம் இந்த உத்தரவினை விடுத்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது ஆட்சிக் காலத்தில் றொணி பீரிஸ் என்பவருக்குப் பத்தரமுல்லைப் பகுதியில் 225 பேர்ச் காணியினை வழங்கியிருந்தார். நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இக் காணி அமைச்சரவையின் அனுமதியுடனேயே வழங்கப்பட்டிருந்தது.

இந்தக் காணி கொடுக்கல் வாங்கலுக்கெதிராக கடந்த வருடம் மனுதாரர்கள் இருவரும் அடிப்படை உரிமை மீறல் மனுவினைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்களை விசாரித்த உயர் நீதிமன்றம் இது குறித்த தீர்ப்பினை நேற்று வழங்கியது. குறித்த காணி கொடுக்கல் வாங்கல் சட்டத்துக்கு முரணானது என்பதனால் இந்த கொடுக்கல் வாங்கல் ரத்துச் செய்யப்படுகின்றது.

காணியை கொள்வனவு செய்தவர் 3 மாதத்துக்குள் அதனை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்க வேண்டும் என்று பிரதம நீதியரசர் உத்தரவிட்டார். (ச-5)

# சென்னையில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகச் சென்னையில் நேற்று மக்கள் கலை இலக்கியக் கழகம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் மக்கள் கலை இலக்கிய கழகத்தைச் சேர்ந்தவர்கள் கிளிநொச்சியிலிருந்து தமிழர்கள் வெளியேற வேண்டும் என்பதை எதிர்த்துக்கண்டனக்குரல் எழுப்பினார்கள்.

அப்போது அந்த அமைப்பினர் இந்திய அரசு இலங்கைக்கு ஆயுதங்கள் வழங்கியும் இராணுவப் பயிற்சியும் அளித்து வருவதாகக் குற்றஞ்சாட்டினார்கள். (ச-5)

# இளைஞன் சரண்

(யாழ்ப்பாணம்)

உயிர்அச்சுறுத்தல் காரணமாக யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் இளைஞர் ஒருவர் நேற்று சரணடைந்துள்ளார். கச்சாய் சாவகச்சேரியை சேர்ந்த நகை வியாபரத்தில் ஈடுபடும் 23 வயதுடைய இளைஞரே இவ்வாறு சரணடைந்துள்ளார்.

இதேவேளை நவாலியில் கராஜ் ஒன்றில் பணிபுரியும் இளைஞன் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்த சிலரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

துணைவி வட்டுக்கோட்டையைச் சேர்ந்த முருகேசு சந்திரகுமார் (வயது 31) என்பவரே கடத்தப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5,49)

# மன்மோகன் சிங்கிற்கு 5 ஆயிரம் தந்திகள்

(புதுச்சேரி)

இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்புக் கோரி பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு புதுச்சேரி மாநில தி.மு.க. சார்பில் 5 ஆயிரம் தந்திகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் கிளிநொச்சியை இலங்கை இராணுவம் மிகவும் நெருங்கியுள்ள நிலையில் இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் உச்சக்கட்ட போர் நடைபெற்று வருகிறது.

இதில் ஏராளமான தமிழர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பாதுகாப்பற்ற நில்ல உருவாகியுள்ளது. இதனை தடுத்து நிறுத்துவதற்காக இந்தியா தலையிட வேண்டும் என்று பிரதமரை தமிழக முதல்வர் கேட்டுக் கொண்டார்.

மேலும் பிரதமருக்கு இலட்சக் கணக்கான தந்திகள் அனுப்ப வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து தி.மு.க. அமைப்பாளர் ஆர்.வி.ஜானகிராமன் தலைமையில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் புதுச்சேரி தலைமை தபால் நிலையத்தில் தந்திகளை பிரதமருக்கு அனுப்பிவைத்தனர்.

இதேபோன்று விடுதலை வேங்கை அமைப்பின் சார்பில் மங்கையர் செல்வம் தலைமையிலும், பெரியார் திராவிடர் கழகம் சார்பில் லோகு ஐயப்பன் தலைமையிலும் மற்றும் விடுதலை சிறுத்தைகள் சார்பில் தாவணன் தலைமையிலும் தலா 100க்கும் மேற்பட்டோர் தந்திகளை பிரதமருக்கு அனுப்பி வைத்தனர். (ச-5)

# கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பம் கோரல்

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆசிரிய கல்வி தொடர்பான ஆரம்ப சேவை தொழில் பாட நெறியைத் தொடர்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2007 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பத்தை பிரதம ஆணையாளர் (ஆசிரிய கல்வி) கல்விக் கல்லூரிக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு 2008.10.31 க்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

(இது தொடர்பாக 10.10.2008) அன்று வெளியாகவுள்ள வர்த்தமானியை இன்று முதல் வலம்புரிக் காரியாலயத்தில் பார்வையிட முடியும்) (ச)

# வன்னிக் களமுனைகளில்...

படையினர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் அக்கராயன்குளம் பகுதியில் 49 படையினரும் வன்னி விளாங்குளம் பகுதியில் 23 படையினரும் காயமடைந்துள்ளனர்.

இம் மோதல்களில் புலிகளின் அகோரத் தாக்குதலால் படையினர் தமது பழைய நிலைகளுக்கு விரட்டியடிக்கப்பட்டனர்.

இதன்போது விடுதலைப் புலிகளால் படையப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பாரிய தாக்குதலையடுத்து படையினர் கிளிநொச்சி புறநகர்ப் பகுதிகளில் தொடர்ச்சியாக ஆட்டிலறித் தாக்குதல், பல்குழல் பீரங்கித் தாக்குதல், விமானத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

இவ்வாறு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை தமிழீழ விடுதலைப்புலிகள் தமது அறிக்கையில் தெரிவித்திருந்தனர். (ச-5)

# கிளிநொச்சி...

யழித்ததோடு ரி-56 ரக துப்பாக்கிகள் இரண்டையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்த மோதல்களின்போது புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதல்களில் 5 படைவீரர்கள் காயமடைந்தனர். முறிகண்டியில் நேற்று முன்தினம் முற்பகல் 11.20 மணியளவில் இடம்பெற்ற மற்றொரு மோதலில் 3 புலிகள் கொல்லப்பட்டனர். இதில் படைவீரர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் காலை 7.20 மணியளவில் அக்கராயன்குளம் பகுதியில் இடம்பெற்ற மோதலில் ஒரு புலி உறுப்பினர் கொல்லப்பட்டதாகவும் ஊடக நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-5)

# தமிழக கட்சிகளின் போராட்டம்...

கலைக்கின்றார்கள். நிலம் விழுங்கி முன்னகரும் படைகளிடமிருந்து உயிர் பிழைக்க எமது மக்கள் நாள்தோறும் இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

மானத்துடனும் மிடுக்குடனும் வாழ்ந்து வந்த தமிழர்களை ஒரு நாடோடிக் கூட்டம் போல் மர நிழல்களுக்குக் கீழும் தெருவோரங்களிலும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் ஒன்று திரண்டு ஒருமித்த உணர்வுடன் தமது தொப்புள் கொடி உறவுகளான ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்திருப்பது அரசை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

தானாடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்பதுபோல ஈழத் தமிழர்கள் அல்லப்படும் போதெல்லாம் தமிழ்நாடு தன் உணர்வலைகளை வெளிப்படுத்துவது வழமை. ஈழத் தமிழர்களின் இன்னல்களைப் போக்க இந்திய மத்திய அரசு உதவ வேண்டும் என்பது தமிழ் நாட்டின் கோரிக்கையாக இருந்து வருகின்றது.

இத்தகைய அரசியல் சூழலில்தான் தமிழ் நாட்டின் அரசியல் கட்சிகளின் தலைமைகள் தமிழின உணர்வுடன் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து ஒற்றுமையை வெளிப்படுத்தியுள்ளன.

அரசு நடத்தும் போருக்கு இந்தியாவின் பகை நாடுகள் ஆயுத உதவிகளைக் கொடுத்து வருகின்றன. உலகிலுள்ள மேலும் சில நாடுகள் அரசுக்குப் பொருளாதார உதவிகள் செய்து வருகின்றன.

இவ்விதம் உலக நாடுகளின் ஒத்தாசையுடன் அரசு போரை நடத்துகின்றது. தொப்புள் கொடி உறவுகளுக்காக நீங்கள் வழங்கும் ஆதரவு தமிழீழ மக்கள் என்றென்றும் தலை நிமிர்ந்து வாழ வழி சமைக்கும்.

கட்சி அரசியலுக்கப்பால் தமிழ்நாட்டுத் தலைவர்கள் ஈழத் தமிழர்களுக்காகக் காட்டியுள்ள ஒருமித்த ஆதரவு கண்டு ஈழத் தமிழர்களும் எமது விடுதலை அமைப்பும் மகிழ்ச்சியடைவதோடு நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழ்நாட்டுத் தலைவர்கள் காட்டி வரும் இந்தத் தார்மீக ஆதரவு செயல் வன்மைமிக்க அரசியல் ஆதரவாக முழுமை பெற வேண்டும் என்பதே ஈழத் தமிழர்களின் அவாவாகும் என்றுள்ளது. (ச-5)

# இலங்கைத் தமிழர் பிரச்சினை...

இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி காலம் தொடக்கம் தற்போதுள்ள ஆட்சிவரை இவ்விடயத்தில் சர்வதேச இராஜதந்திர கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு அனைத்து நடவடிக்கைகளையும் இந்திய அரசு எடுத்து வந்துள்ளது என்றும் அவர் தமிழோசையிடம் தெரிவித்தார்.

இராணுவத் தீர்வைத் தவிர்த்து அரசியல் ரீதியிலான தீர்வையே இந்திய அரசு எப்போதும் ஆதரித்து வந்துள்ளது என்றும் இதே கொள்கையைத்தான் தொடர்ந்தும் பின்பற்றி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் இந்திய அரசு ஒருதலைப்பட்சமாகவும் தமிழர்களுக்கு விரோதமாகவும் நடந்து கொள்வதாகப் பாரதீய ஜனதாக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்திய அரசின் இவ்வாறான நடவடிக்கையினை தமது கட்சி கண்டிப்பதாக அதன் தமிழகக் தலைவர் இல.கணேசன் தமிழோசையிடம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் மீதான தாக்குதல்கள் என்கிற போர்வையில் பொதுமக்கள் மீதுதாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருந்துப் பொருள்கள் உட்பட அத்தியாவசியப் பொருள்களைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாக அனுப்பப்படுவதைக் கூட இலங்கை அரசு தடுத்து வருகின்றது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் ஒரே வழி. இராணுவ நடவடிக்கைகள் தீர்வாகாது என்பதே தமது கட்சியின் நிலைப்பாடு. இராஜாங்க வழிமுறைகளின் மூலமாகவும் சர்வதேச சமூகத்தின் மூலமும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதை விடுத்து இராணுவ உதவிகளையும் வழங்கி அதற்கு மேலாகப் பயிற்சியளிப்பதற்கு ஆட்களை அனுப்பி உதவிய இந்திய அரசின் நடவடிக்கை கண்டிக்கத்தக்கது என்றும் அவர் கூறினார்.

கடந்த 4 ஆண்டுகளாக இந்தியாவை ஆளும் கூட்டணியிலிருக்கும் தி.மு.க. ஏன் இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் இவ்வளவு நாள் மௌனம் காத்தது என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (ச-5)

# வன்னிப்...

கடிதங்கள் வவுனியா அலுவலகத்தில் தேங்கிக் கிடந்ததாகவும் தபால்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தக் கடிதங்கள் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வாகனத்தின் மூலமாக வவுனியாவிலிருந்து வன்னிக்கும் வன்னியிலிருந்து வவுனியாவுக்கும் எடுத்துச் செல்லப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3,5)

# சங்குப்பிட்டி...

புலி உறுப்பினர் ஒருவரின் சடலத்தையும் ரி-56 ரகத் துப்பாக்கி, கைக் குண்டுகள், கிளைமோர்க் குண்டுகள் மற்றும் துப்பாக்கி ரவைகள் உட்பட பெருமளவில் வெடிபொருள்களையும் மீட்டுள்ளதாகவும் ஊடக நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-5)

# நோர்வே...

நீதிமன்றத்திற்குச் சென்று மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜாவைச் சந்தித்துள்ளனர்.

உயர் பாதுகாப்பு வலயங்களில் சிவிலியன்களைக் குடியமர்த்துவது மற்றும் சட்டம் ஒழுங்கு என்பவற்றைப் பேணுதல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.மாவட்ட நீதிமன்றங்களின் வசதிகள் குறித்தும் மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா விளக்கமளித்துள்ளார். இதேவேளை இக் குழுவினர் இன்று யாழ். அரச அதிபரைச் சந்தித்துப் பேசவுள்ளனர். (ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.